
திருவள்ளுவர் ஆண்டு 2050 ஆனி- ஐப்பசி
சூன் - அக்டோபர் 2019.

ரூ. 8.00


மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்



பிரான்மலை (திருக்கொடுங்குன்றம் - பறம்புமலை) திருக்கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் காட்சி

நாள் : 12-09-2019



சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கு
அமெரிக்கா தமிழ்நாடு அறக்கட்டளை விழாவில்
"மாட்சிமை விருது" தந்து சிறப்பித்தல். நாள் : 25-05-2019

தமிழ் நாடு அறக்கட்டளை
அமெரிக்கா

"மக்களின் முனிவர்" தவத்திரு குன்றக்குடி

குன்றக்குடி
பொன்னம்பல அடிகளார்



கல்வி மற்றும் சமுதாய சேவையைப் போற்றி

"மாட்சிமை விருது"

வழங்கி சிறப்பிக்கிறது

அட்லாண்டா, அமெரிக்கா
மே 25-26, 2019

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2050	மாதம் : ஆனி - ஐப்பசி
மலர் : 33	இதழ் : 5 - 9

சிறப்பாசிரியர்
தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களின்

அமெரிக்கப் பயணச் சிறப்புக் கட்டுரை

நமது அமெரிக்கப் பயணம் 2019 மே 22 ஆம் தேதி தொடங்கி ஜூன் 14ம் தேதி வரை இருந்தது. அமெரிக்காவில் அட்லாண்டா மாநகரில் நம்முடைய அமெரிக்கத் தமிழ்ப் பெருமக்களின் பேரமைப்பாக அமெரிக்காவில் உள்ள அமெரிக்கத் தமிழ்நாடு அறக்கட்டளை என்ற அமைப்பின் மூலம் நடைபெற்ற மாநாட்டில் “மாட்சிமை” விருதினை நமக்கு வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள்.

அட்லாண்டா மாநகரில் அந்தப் பிரமாண்டமான அரங்கத்தில் 2000க்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். நம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்து வந்த அமெரிக்கத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் அன்புத் தமிழர்கள் ஆவர். அந்த அரங்கமே ஒருசேர எழுந்து நின்று கரவொலி ஒலிக்க, நம்முடைய கல்வி, சமூகத் தொண்டு, மனிதநேயப் பணிகளைப் பாராட்டி “மாட்சிமை” விருது என்ற உயரிய விருதை வழங்கியபோது நம் கண்களில் ஈரம் கசிந்தது. நம் விலாசம் தேடி வந்த இந்த விருது இன்னும் ஆற்ற வேண்டிய பணிகளும், கடமைகளும் மலையெனக் காத்திருக்கின்றன என்ற எண்ணத்தைத் தூண்டியது.

நம் தொப்புள் கொடி உறவுகள் அன்பின் உணர்வோடு வழங்கிய விருது. அதை ஏற்றுக்கொண்டு நம் பணிகளைத் தொடரவேண்டிய கடப்பாடு நமக்கு நிறைய இருக்கிறது.

அமெரிக்கப் பயணம் நமக்கு நிறையக் கற்றுத் தந்தது. எப்படி அற்புதமான மனிதநேயமிக்க நாடாக விளங்குகிறது அமெரிக்கா! நம் தமிழ் மக்கள் அங்கே தேனீக்களைப் போல உழைத்துக்

கொண்டிருக்கிறார்கள். அங்கே எவரும் ஒரு நிமிடம் கூட சும்மா இருப்பதில்லை. எப்போதும் உழைப்பு! கணவன், மனைவி இருவரும் சேர்ந்து உழைக்கின்றனர். எந்த வீட்டிலும் தங்கள் வேலைக்கென்று பணியாட்கள் கிடையாது. கார் ஓட்டுவதற்கு என்று தனியாக ஓட்டுநர் வைத்துக்கொள்வது கிடையாது. எல்லாப் பணிகளையும் அவரவரே செய்கின்றனர்.

உதவியாளர் இன்றி நாமும் தனிப்பயணமாகச் சென்ற முதல் வெளிநாட்டுப் பயணம் அது. அந்தப் பயணத்தில் நமக்குக் கிடைத்த அனுபவம் அதிகம். சில நேரங்களில் விமானப் பயணமும் உண்டு. பல நேரங்களில் காரில் பல மைல் தூரம் பயணித்தோம். நாம் விமானத்தில் பயணிக்கிறபோது ஒருமுறை கூஸ்டன் நகரில் இருந்து பிலடெல்பியா நகருக்குச் சென்று கொண்டிருந்தது விமானம். விமானத்தில் இருந்து இறங்கியவுடன் – விமான நிலையத்தில் நம்முடைய முகப்பிற்கு வரும் தூரம் நீண்டதாக இருந்தது. மொழி தெரியாத நிலை. உதவியாளர் எவரும் உடனில்லை. தனியாகவே கூஸ்டன் நகரில் இருந்து பிலடெல்பியா நகருக்குப் பயணித்தோம். அப்போது நம்மை வரவேற்க தமிழ்நாடு அறக்கட்டளையின் தலைவர் பாராட்டுதலுக்குரிய சோமசுந்தரம் அவர்கள் காத்திருந்தார். மொழி தெரியாத இடத்தில் நமக்குப் பிரச்சனை வரவேண்டாம் என்று நினைத்து விமானத்தை விட்டு நம்மை சக்கர நாற்காலியில் அழைத்துப்போக ஏற்பாடு செய்திருந்தார்கள். அங்கே சக்கர நாற்காலிகளை இயக்கிக் கொண்டிருந்தவர்கள் ஆப்பிரிக்க அமெரிக்கப் பெண்கள். அவர்கள் சுறுசுறுப்பாய்ப் பணிசெய்கிறார்கள். ஒரு பெண்மணி நம்மை சக்கரநாற்காலியில் அமர வைத்துவிட்டு அந்தச் சக்கர நாற்காலியை வேகமாய் ஓட்டினார். ஒரு காரைப் போல அந்தச் சக்கர நாற்காலி ஓடியது.

அந்தப் பெண்மணி ஆங்கிலத்தில் "தாங்கள் எங்கே போகவேண்டும்? யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டதற்கு நாம் சொன்ன பதில் அவருக்குச் சரியாகப் புரியவில்லை. கொஞ்ச நேரத்தில் நம்மை வரவேற்பவர் நம் அருகே வந்துவிட்டார். அப்போது அவரிடம் நாம் சொன்னோம். "நீங்கள் இந்த நேரத்தில் வரவில்லை என்றால் இந்த அம்மையாரின் இல்லத்தில் தான் நான் தங்கியிருக்க வேண்டும்" என்றோம். அதை அந்த அம்மையாரிடம் அவர் சொன்னார்.

அந்த அம்மையார் மகிழ்ச்சியோடு "எங்கள் இல்லத்தில் தங்குவதாக இருந்தால் மிகுந்த மகிழ்ச்சி" என்றார். அது அவர்களின் பண்பட்ட உபசரிப்பு. ஆப்பிரிக்க அமெரிக்கப் பெண்மணிகளைப் பார்க்கிற போது, காலத்தையும் எவ்வளவு பெரிய தடைகளையும் தாண்டி அவர்கள் பயணித்திருக்கிறார்கள்! அங்கு இன்றைக்கு எங்கும் ஆப்பிரிக்க அமெரிக்க இளைஞர்கள், பெண்கள் பரபரப்பாய் அமெரிக்க நாடு முழுவதும் பணிசெய்கிறார்கள். வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் இந்த வாய்ப்புகளை அவர்கள் பெறுவதற்கு வாழ்க்கையில் எவ்வளவு கடினமாகப் பயணம் செய்திருக்க வேண்டும்?

ஆப்ரகாம் லிங்கன் மனிதநேயத்தின் உச்சத்தில் தம் வாழ்வைச் செலுத்தினார். அவர் குடியரசுத் தலைவராக இருக்கிறபோது ஒருமுறை வாஷிங்டனுக்கு கோச் வண்டியில் போய்க்கொண்டிருக்கிறார். அப்போது நல்ல, அழகான, கம்பீரமான உடைகளை அணிந்திருக்கிறார். அவரின் கோச் வண்டி கடந்து போகிற பாதையில் ஒரு புதைகுழியில் பன்றிக்குட்டி ஒன்று விழுந்து உயிருக்குப் போராடித் தவித்துக்கொண்டிருந்தது. லிங்கன் வண்டியை நிறுத்தச் சொன்னார். தானே இறங்கி ஓடி வந்து புதைகுழியில் சிக்கிக் கொண்டிருந்த பன்றிக்குட்டியைக் காப்பாற்றினார். அவரது ஆடம்பரமான, அழகான உடைகளில் சேறும், சகதியும் பட்டுவிட்டது. அத்துடனே அவர் வெள்ளை மாளிகைக்கு வந்தார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பலரும் அவரைப் பாராட்டினார்கள்.

லிங்கன் குறுக்கிட்டு, "என்னை யாரும் புகழாதீர்கள், இது புகழ்வதற்குரிய செயல் அல்ல. அந்தச் சின்னஞ்சிறிய உயிர் புதைகுழியில் சிக்கிக்கெண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது என் இதயத்தில் ஒரு முள் தைத்தது போல உணர்வு ஏற்பட்டது. நான் அந்தப் பன்றிக்குட்டியைக் காப்பாற்றியதன் மூலம் அதன் உயிரைக் காப்பாற்றினேனோ இல்லையோ என் இதயத்தில் தைத்திருந்த முள்ளை நான் அப்புறப்படுத்திவிட்டேன். அந்தப் பன்றிக்குட்டியை நான் காப்பாற்றத் தவறியிருந்தால் என் இதயத்தில் தைத்த முள் என் வாழ்நாள் முழுவதும் ஆழமான காயத்தையே ஏற்படுத்தியிருக்கும். அதனால் அந்தப் பன்றிக்குட்டியைக் காப்பாற்றிய செயல் மூலம் என் இதயத்திற்குத் தான் நான் நன்மை செய்துகொண்டேன். என்னை யாரும் புகழாதீர்கள்" என்று சொன்னார். எவ்வளவு பெரிய மகத்தான பார்வை அவரது பார்வை!

அதே போல் அவரது இளமைக்காலத்தில் ஒரு தபால் அலுவலகத்தில் ஒரு பொறுப்பில் அவர் பணியாற்றியபோது அந்த அலுவலகத்தின் பணக்கணக்கு அவரிடம் இருந்தது. அவர் பொறுப்பில் இருந்து விடுபட்ட நீண்ட இடைவெளிக்குப் பிறகும்கூட அந்தக் கணக்கை அவர் பத்திரமாய்ப் பாதுகாத்து வைத்திருந்தார். ஒருநாள் உயர் அதிகாரி அவரைச் சந்தித்து அந்தக் கணக்கைப் பற்றிக்கேட்டபோது, தான் பத்திரமாக வைத்திருந்த அந்தப் பணக்கணக்கைச் சரியாக ஒப்படைத்தார். அதற்குரிய பணத்தைப் பத்திரமாகக் கட்டிப் பல ஆண்டுகள் வைத்திருக்கிறார். ஆச்சரியப்பட்டுப்போனார் அந்த உயர் அலுவலர். பாருங்கள்! ஆப்ரகாம் லிங்கன் நா நயம் மிக்கவர் மட்டுமல்ல; நாணயம் மிக்கவரும்தான்.

இளமைக்காலத்தில் படிப்பில் மிகுந்த ஆர்வம். ஒரு புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்பதற்காக இரவலாகப் பெற்றார். நல்ல குளிர்காலத்தில், கும்மிருட்டில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்தார். மழைக்காலத்தில் அவரது வீட்டுக் கூரையில் மழை கொட்டி அந்தப் புத்தகம் நனைந்துவிட்டது. மாற்றுப் புத்தகம் அவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு அப்போது கடினமான கூலி வேலைகளைச் செய்து அதன்மூலம் பெற்ற பணத்தின் மூலம் புதிய புத்தகம் ஒன்று வாங்கிக் கொடுத்தார். கடின உழைப்பின், நேர்மையின், உண்மையின் அடையாளம் ஆப்ரகாம் லிங்கன்.

ஆப்ரகாம் லிங்கன் கெட்டிஸ்பெர்க் கல்லறையில் ஆற்றிய உரை உலகப் புகழ்பெற்ற உரை மட்டுமல்ல. அவரது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து எழுந்த சத்திய நாதத்தின் முழக்கம். 270 சொற்களே உள்ள அந்த உரை நீண்ட முழக்கங்கள் டாம்பிகம் அற்ற உரை. அந்த உரையை அவர் வாசிக்கிறபோது உடல்நலம் குன்றியிருந்தார். அவரது சொற்பொழிவில் எதுகை இல்லை. மோனை இல்லை. அலங்காரச் சொற்கள் இல்லை. ஆரவார உடல் அசைவுகள் இல்லை. உரை நிகழ்த்தியவுடன் கைதட்டுவதற்குக்கூட உடனடியாக மக்கள் முன்வரவில்லை. ஆனால் அந்த உரைவீச்சின் தாக்கம் உலக உரைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

அந்த உரையைக் கேட்ட ஒரு பள்ளி ஆசிரியர் ஜோஸப் கவுல்டன் என்பவர் தன் ஆசிரியப் பணியை விட்டுவிட்டு இராணுவத்தில் சேர்ந்ததற்கு அந்தப் பேச்சின் தாக்கம்தான் காரணம். ஆப்ரகாம் லிங்கன் என்ற

மாமனிதர் மனிதநேயம் கொண்டவர். அவர் சகதியில் சிக்கிய பன்றிக்குட்டியை மட்டும் காப்பாற்றவில்லை. அமெரிக்க நாட்டையும், சங்கிலியில் சிக்கிய அமெரிக்க ஆப்பிரிக்க மக்களையும் விடுவிக்க முனைந்தவர். அதற்கு அவர் கொடுத்த விலை என்ன? அவரது உயிர்!

அவரது இளமைக் காலத்தில், மக்கள் ஆடுமாடுகளைப்போல் விற்கப்படுகிற காட்சியைப் பார்த்துவிட்டு, "நான் ஜனாதிபதியானால் நிச்சயம் இதை ஒழிப்பேன்" என்று சூளுரைத்தார். இளமையில் அவர் எடுத்துக்கொண்ட சூளுரையை நிறைவேற்றிக் காட்டினார். அவர் வழக்கறிஞர் பணியும் ஆற்றினார். ஆனால், ஒருபோதும் தவறானவர்களுக்காக வழக்காடியது இல்லை. தவறுகளைச் செய்துவிட்டு வருபவர்களின் வழக்குகளை அவர் ஏற்பது இல்லை. ஏழைகளுக்குக் கட்டணம் இன்றி இலவசமாக வழக்காடினார். எந்த ஒரு நபரையும் அவர் எதிரியாகப் பார்த்தது இல்லை. நாட்டின் முன்னேற்றத்திற்குத் தன் சுயகௌரவத்தையும் விட்டுக் கொடுத்தவர். மனிதகுல வரலாற்றில் அடிமை முறையைப் போன்ற அவலம் வேறு எதுவும் இருக்க முடியாது. அந்த நிலை மாறவேண்டும் என்று நினைத்தவர்.

ஆப்ரகாம் லிங்கன் அடிமை முறையை ஒழிப்பதற்கு எடுத்த முயற்சிகள் கண்டு காரல்மார்க்ஸ் அவருக்குப் பாராட்டுக் கடிதம் எழுதினார்.

அவரது கெட்டிஸ்பெர்க் உரையில் அடிமைத் தனம் பற்றியோ, வெற்றியைப் பற்றியோ எதுவும் கூறவில்லை. ஏவரையும் புண்படுத்தாதவாறு மிகவும் கவனமாக எச்சரிக்கையோடு உரையாற்றினார். அனைத்து மனிதர்களும் சரிசமம் ஆனவர்கள் என்ற சுதந்திர உணர்வில் பிறந்த தேசம் என்று அவர் உரையைத் தொடங்குகிறபோதே அவரது தொலைநோக்குப் பார்வை நமக்குப் புலப்படுகிறது.

நாம் இங்கே பேசுவதை உலகம் மறந்துவிடும். ஆனால் அவர்கள் இங்கே என்ன செய்தார்கள் என்பதை உலகம் ஒருபோதும் மறக்காது என்று இன்னுயிரை ஈந்த வீரர்களைப்பற்றி அவர் புகழ்கிறார்.

உண்மையான பாராட்டு என்பது மின்னலைப் போல இருக்க வேண்டும். பாராட்டு பாதரச விளக்குப்போல நீண்ட நேரம் எரிவதாக இருக்கக் கூடாது. பாராட்டு எப்போதும் மிகையில்லாததாக இருக்க

வேண்டும். அவர்கள் முடியாமல் விட்டுவிட்ட பணியை நாம் தான் நிறைவு செய்ய வேண்டும். அடிமைத் தனத்தை முற்றிலுமாக ஒழிப்பதும், அது நடந்தே தீரும் என்ற நம்பிக்கையும் உயிரை விட்டவருடைய கனவு. அவர்களது மரணம் வியர்த்தமாகக் கூடாது.

உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டினார் ஆப்ரகாம் லிங்கன். கவிஞர் கண்ணதாசன் ஜனநாயகத்திற்கு ஒரு விளக்கக் கவிதை தருவார்.

"ஜனநாயகம் என்ற சந்தைக்கு நான்
தந்த சரக்குகள் விற்கவில்லை.
பணநாயகம் சாதி இனநாயகம்
யாவும் இயல்பாக வாழும் உலகில்
தமிழ்நாயகம் என்ற பெயரின்றி
என்னைத் தழுவுவோர் யாருமில்லை"

என்ற கண்ணதாசனின் கவிதை வரிகள் ஜனநாயகத்தின் மகத்துவத்தை அடையாளம் காட்டுகிறது.

"பிரெஞ்சு நாட்டு அரசியலமைப்புச் சட்டம், மக்களால் மக்களுக்கான அரசு" என்ற சொற்களை லிங்கனின் சாசனத்தில் இருந்துதான் தத்து எடுத்துக்கொண்டது.

சன்யாட்சென் மக்களின் மூன்று கொள்கைகள் என்ற கோட்பாட்டை கெட்டிஸ்பெர்க் உரையில் இருந்துதான் எடுத்துக்கொண்டார். அந்த உரையின் பல சொற்கள் பலவிதங்களில் பிரபலமாகியுள்ளது. இந்த உரையைத் தான் பின்னாளில் மார்ட்டின் லூதர் கிங் 1963ஆம் ஆண்டு பேசுகிறார். கென்னடி இந்த உரையைப் புகழ்ந்து மகிழ்ந்தார்.

இன்னும் சிலரோ லிங்கனே இந்த உரையை மறக்கப்படலாம். ஆனால், இந்த உரையை உலகம் எந்நாளும் மறக்காது என்று இதயத்தில் வைத்து ஆராதனை செய்கிறார்கள்.

அமெரிக்காவில் ஜூனியர் மார்ட்டின் லூதர் கிங்கின் மியூசியத்திற்கு நாம் சென்றோம். சற்று தாமதம். நண்பகல் வேளை. அப்போது அந்த மியூசியத்தின் பொறுப்பில் இருந்த ஆப்பிரிக்க அமெரிக்கப் பெண்மணி நம்மைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியோடு "தாமதம் ஆனாலும் பரவாயில்லை" என்று சொல்லி காட்சியகத்தைப் பார்ப்பதற்கு அனுமதித்தார்.

மார்ட்டின் லூதர் கிங் "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்று முழங்கியவர். லிங்கனின் அடிச்சுவட்டில் நிறவேற்றுமையை ஒழிப்பதற்குப் பாடுபட்டவர். மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்காவில் எந்த அதிகாரப் பொறுப்பும் வைத்துக்கொள்ளாத, மக்கள் மனங்களில் நிறைந்த, புகழ்மாலை சூட்டப்பட்ட மகத்தான மாமனிதர். "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்று லிங்கனின் நினைவிடத்தின் படிக்கட்டுகளில் கம்பீரமாக நின்று அவர் ஆற்றிய பேருரை உலகத்தை உலுக்கியது. அந்த உரை 50 ஆண்டுகளைக் கடந்திருக்கிறது. 2011 ஆம் ஆண்டு ஆகஸ்டு 28ஆம் நாள் மார்ட்டின் லூதர் கிங் ஆற்றிய உரையின் பொன்விழா கொண்டாடப்பட்டது. சில சொற்பொழிவுகள் காலத்தில் அழிந்துவிடும். சில சொற்பொழிவுகள் வெறும் சொற்களின் குவியல்களாக அல்லாமல் கல்வெட்டாய் நிலைத்து நிற்கும். அப்படித்தான் மார்ட்டின் லூதர்கிங் ஆற்றிய பேருரை.

அவருக்கும் மகாத்மா காந்தியடிகளே ஆன்மீக குரு; மானசீக குரு. காந்தியத்தின் தடத்தில் அகிம்சையின் வழியில்தான் மார்ட்டின் லூதர் கிங் செயல்பட்டார். அகிம்சை வழியே அவரது வழியாக இருந்தது.

விலங்குகளைக் காட்டிலும் கொடூரமாக நடத்தப்பட்டனர் கறுப்பின மக்கள். அவர்களின் தோலின் வண்ணமே காரணம் என்பது நினைக்க நினைக்க கண்ணீர் வரவழைக்கிறது. அவர்கள் அடுக்கடுக்காக அடுக்கி வைக்கப்பட்ட பலகைகளில் அடுக்கி வைக்கப்பட்டார்கள். அவர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தார்கள். அங்கேயே உணவு, அங்கேயே இயற்கை உபாதைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய கஷ்டநிலை. இப்படி கறுப்பின மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் விளைவாகத்தான் "டாம் மாமன் குடில்" என்ற புத்தகம் தோன்றியது.

இவர்களது கொடுமைகளைத் தீர்க்க யார் இருக்கிறார்கள்? என்ற நிலையில், காலம் ஆப்ரகாம் லிங்கனை அழைத்து வந்தது. அவர் 1961 இல் அமெரிக்காவின் வெள்ளை கதவுகளைத் திறந்து வைத்துவிட்டு, இன்றிலிருந்து இங்கு 40 இலட்சம் கறுப்பின மக்களும் சுதந்திர அமெரிக்காவில் இருந்து விடுதலை செய்யப்படுகிறார்கள் என்று தங்கப்பேனாவால் ஒற்றைக் கையெழுத்திட்டார். அந்தப் புரட்சியின் தொடர்ச்சியை ஜூனியர் மார்ட்டின் லூதர் கிங் எடுத்து வந்தார்.

அமெரிக்காவில் இன்று கறுப்பின மக்கள் சாதாரண உரிமைகள்கூட பெறமுடியாது என்ற நிலையைத் தாண்டி அமெரிக்காவின்

குடியரசுத் தலைவராக ஆவதற்கு ஆப்ரகாம் லிங்கன், மார்ட்டின் லூதர் கிங், கென்னடி போன்றவர்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்களின் உயிர்களில்தான் இந்தக் கோபுரம் எழுப்பப்பட்டிருக்கிறது.

இனவேற்றுமை நோயை ஒழிப்பதற்காகத் தான் ஜுனியர் மார்ட்டின் லூதர்கிங் வீரமரணத்தைத் தழுவினார். அவர் அருமையாகக் குறிப்பிடுவார்.

"நீங்கள் தெருப் பெருக்குபவர்களாக நியமிக்கப்பட்டால் ஷேக்ஸ்பியர் கவிதை எழுதுவதைப் போலவும், பீத்தாவோன் இசை அமைப்பதைப் போலவும், மைக்கேல் ஏஞ்சலோ ஓவியம் தீட்டுவதைப் போலவும் நேர்த்தியுடனும், ஆர்வத்துடனும் செய்யுங்கள். வானத்தில் போகிற தேவதைகளெல்லாம் ஒரு நிமிடம் நின்று இங்கு மாபெரும் தெருப் பெருக்குபவர் இருக்கிறார் என்று சொல்லும்படி பணியாற்றுங்கள்" என்று அவர் பேசிய கருத்து, பணிகளில் ஏற்றத் தாழ்வு இல்லாமல், எந்தப் பணியை எடுத்துக் கொண்டாலும் கடமை உணர்வோடு, உள்ளார்ந்த உண்மை உணர்வோடு ஆற்றவேண்டும் என்பதைத் தான் நமக்கு வலியுறுத்துகிறது.

அமெரிக்காவின் செல்வச் செழிப்பிற்கு கறுப்பின மக்கள் சிந்திய வியர்வையும், இரத்தமுமே காரணம். செவ்விந்தியர்களும் கறுப்பின மக்களும் கொல்லப்பட்ட கல்லறையே அமெரிக்க நாடு என்ற அழகுப் பிரதேசம் என்று பேசுகிறபோதே அது வரலாற்று நிகழ்வாக இருக்கும் என்ற தன்னம்பிக்கையுடன் தான் அவர் அந்தப் பேச்சைத் தொடங்கினார். மிகுந்த கவித்துவம்மிக்க ஆங்கில உரை அது.

அவரது பெற்றோர்கள் பைபிளில் ஊறியவர்கள் என்பதால் அவரது சொற்பொழிவுகளில் பைபிளின் சாயல் எப்போதும் இருப்பதுண்டு. ஆப்ரகாம் லிங்கனுடைய கல்லறையில் லூதர் கிங் முழங்கினார். நூற்றாண்டுகள் கழித்தும் நீக்ரோக்கள் சுதந்தரம் அடையவில்லை. அவர்களுடைய வாழ்க்கை இன்றும் தனிமை என்ற லாயத்தாலும், வியர்வை என்ற சங்கிலியாலும் பிணைக்கப்பட்டிருக்கிறது. உண்மையான சுதந்திரம் வறுமையில் இருந்தும், சமூகப் புறக்கணிப்புகளில் இருந்தும் ஒருவர் விடுபடுவதுதான் என்றார்.

அமர்த்தியாசென் குறிப்பிட்டதைப் போல வாய்ப்புகள் மறுக்கப்படுவதே வறுமை நிலையால்தான்.

இறையன்பு ஐ.ஏ.எஸ். குஷ்வந்த் சிங் எழுதிய ஒரு தகவலைக் கூறுவார். குஷ்வந்த் சிங் அமெரிக்கா போகும்போது, கறுப்பின மக்களிடம் கவனமாக இருங்கள். ஏமாற்றிவிடுவார்கள் என்று யாரோ எச்சரித்திருக்கிறார்கள். அவர் பயணித்த காரின் ஓட்டுநர் கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர். எங்கே அதிகமாக கார்வாடகை கேட்பாரோ என்ற மன உறுத்தலோடு அமைதியின்றிப் பயணம் செய்கிறார் குஷ்வந்த் சிங். ஆனால், குறித்த நேரத்தில் போகவேண்டிய இடத்திற்கு வந்தவுடன் அந்த ஓட்டுநரிடம் "எவ்வளவு வாடகை தரவேண்டும்" என்று அவர் கேட்க, "நீங்கள் எங்களுடைய ஆசான். மார்ட்டீன் லூதர் கிங் வழிகாட்டியான மகாத்மா காந்தி பிறந்த ஊரில் இருந்து வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வாகனம் ஓட்டியது என் கௌரவம்? என்று சொல்லி வணக்கம் செலுத்திவிட்டு ஒரு டாலர் கூட வாங்காமல் சென்று விட்டார் என்றும் குறிப்பிடுவார். இதுதான் அவர்களுடைய பண்பாடு. நம்மிடம் சில தவறான புரிதல்களை ஏற்படுத்த வெள்ளையினம் எப்படி முயற்சி செய்கிறது" என்பதும், நாமும் அவற்றையெல்லாம் எவ்வளவு எளிதில் நம்பிவிடுகின்றோம் என்பதும் இதன் மூலம் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

மார்ட்டின் லூதர் கிங் "அமெரிக்கா நமக்கு மோசமான காசோலையைத் தந்து ஏமாற்றிவிட்டது" என்கிறார். அவருடைய கனவு நிறைவேறமுடியாத ஒன்றல்ல. தேனாறு, பாலாறு ஓடவேண்டும என்று அவர் கனவு காணவில்லை. குறைகள் இல்லாத சமத்துவ சமநிலை வேண்டும் என்பதுதான் அவர் கனவு.

"எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்று லூதர் கிங் சொல்கிறார். "என்னுடைய நான்கு சின்னக் குழந்தைகளும் அவர்களுடைய தோலின் நிறத்தால் மதிப்பிடப்படாமல் அவர்களின் குணநலன்களால் மதிப்பீடு செய்யப்படும் நாட்டில் ஒருநாள் வாழ்வார்கள்". என்று அவர் கூறும்போது நமக்கு ஏற்படும் உணர்வுதான் மனிதநேயத்தின் அளவுகோல். அறிவியல் வளர்ந்தும், பரிணாம வளர்ச்சி தெரிந்தும், படித்தவர்களே நிறம் என்பது முக்கியமல்ல என்று உணராவிட்டால் என்ன செய்ய முடியும்?

இன்று நம் நாட்டில் ஒருவரை அடையாளப்படுத்த நிறத்தைத் தான் அடையாளம் காட்டுகிறோம். மார்ட்டின் லூதர் கிங் சிந்திய இரத்தம் வீணாகவில்லை. அது ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது. கல்வி அறிவு பரவலாக்கப்படும்போது எல்லாப் புறக்கணிப்புகளும் புறமுதுகிட்டு ஓடும் என்பது நிச்சயம்.

அமெரிக்காவின் டாலஸ் நகரத்தின் பெரிய வீதிகளில் ஜான்எஃப் கென்னடி குடியரசுத்தலைவராக இருந்தபோது மக்களைப் பார்த்து முகம் மலர்ந்து கையசைத்துச் சென்று கொண்டிருந்தார். அந்த அன்பு முகத்திற்குச் சொந்தக்காரரான ஜான் எஃப் கென்னடி சில நொடிகளில் அந்த டாலஸ் நகரத்தில் துப்பாக்கிக் குண்டுகளால் வீழ்த்தப்படுகிறார். அதற்கான நினைவுத் தூணை அமெரிக்கா எழுப்பியிருக்கிறது. அமெரிக்கா எப்போதும் நினைவுச் சின்னங்களை எழுப்புவதிலும், நினைவகங்களைப் பராமரிப்பதிலும், காப்பகங்களை உருவாக்குவதிலும், நூலகங்களைப் பாதுகாப்பதிலும் மிகச் சிறப்பாகத் தன்னிகரற்று விளங்கும். அமெரிக்காவில் டாலஸ் நகரத்தில் நினைவுத் தூண் ஜான் எஃப் கென்னடி அவர்களுக்கு உள்ளது. அவரை உயரமான அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்து யாரோ ஒரு கயவன் சுட்டுவிட்டான். "நாடு உனக்கு என்ன செய்தது" என்று கேட்காதே. நாட்டிற்கு நீ என்ன செய்தாய்?" என்ற கென்னடியின் சொற்கள் உலகம் முழுவதும் இன்றும் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. ஆனால், நாட்டிற்கு நீ என்ன செய்தாய்" என்ற கேட்ட அவர், தன்னையே நாட்டிற்குத் தந்துவிட்டார்.

இப்படிப்பட்ட பல மகத்தான மாமனிதர்களின் வரலாற்றை இளைய தலைமுறை தெரிந்துகொள்ள வேண்டும்.

ஜூனியர் மார்ட்டின் லூதர் கிங் ஒரு அற்புதமான பொன்மொழியை நாட்டிற்குத் தந்தார். அவர் வாக்கெல்லாம் மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கான பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுகின்ற வைரவரிகள். அதில் ஒரு அற்புத வரி.

'Whatever your life work is, do it well. A man should do his job so well that the living, the dead and the unborn could do it no better'

வாழ்ந்து மறைந்தவர்கள், வாழ்பவர்கள், இனிமேல் பிறப்பவர்கள் எவரும் இதைவிடச் சிறப்பாக செய்ய முடியாத அளவிற்கு ஒருவன் தான் செய்யும் வேலையைச் செய்ய வேண்டும் என்று ஜுனியர் மார்ட்டின் லூதர் கிங் குறிப்பிடுகிறார்.

வேலைக்கும் கடமைக்கும் என்ன வேறுபாடு? எப்படி வேலை செய்வது?

நம் மறைந்த மகாசன்னிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் குறிப்பிடுவார்கள். "வேலை எனபது ஜீவன உபாயம், வயிற்றுப் பிழைப்பு, கடமை என்பது தானும் உயர்ந்து சமூகத்தையும் உயர்த்துவது. வயிற்றுப் பிழைப்புதான் வேலை. ஆனால், சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயன்தரத்தக்க பணியாற்றுவதுதான் கடமை" என்று சொல்வார்கள்.

அந்தக் கடமையைத் தான் பனிப்பாறைகளில், கொட்டும் மழையில், அடிக்கும் சூறைக்காற்றில் தேசத்தின் எல்லையைக் காக்கிற போர்வீரர்களிடம் காணமுடிகிறது. அந்தக் கடமை உணர்வு உயிர் காக்கும் மருத்துவர்களிடம் இருக்கிறது. தீயணைக்கும் தீயணைப்பு வீரர்களிடம் இருக்கிறது. கடமையாற்றும் வீரர்கள் இன்னும் எத்தனை எத்தனையோ இந்தச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இர்வின் வாலஸ் எழுதிய புதினத்தை அடிப்படையாக வைத்து பேரறிஞர் அண்ணா "வெள்ளை மாளிகையிலே..." என்ற அற்புத நூலைத் தந்தார். எல்வின் வாலஸ் கறுப்பின மக்களுக்கு இழைக்கப்படுகின்ற நிலைப்பாட்டையும, கறுப்பர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியாக வர முடியாது என்பதையும், அப்படி வந்தால் அவர் எப்படி தொல்லைக்குள்ளாவார் என்பதையும் குறித்து அந்தப் புதினத்தில் எழுதியிருந்தார். அந்தப் புதினத்தின் பதிவுகளைத் திரட்டி வரலாற்றுத் திறமையோடு அண்ணா தன் தம்பிகளுக்கு தொகுத்து எழுதிய நூலே வெள்ளை மாளிகையிலே... என்ற நூல்.

அண்ணாவிற்கு நாடாளுமன்றத்தில் தொடக்க உரையாற்ற மூன்று நிமிடம் வாய்ப்புக் கொடுத்தார்கள். கன்னிப் பேச்சு, ஆனால், அது கனிந்த பேச்சு, மூன்று நிமிட வாய்ப்பு மூன்று மணி நேரம் தங்குதடையற்ற அருவியென ஆற்றொழுக்காக அண்ணாவின் அந்தப் பேருரை நிகழ்ந்தது.

தமிழர்களின் தமிழ்மொழி ஆட்சிமொழியாக வேண்டும் என்று கூறியபோது, மக்கள் பேசுவது குறைவாக இருக்கிற காரணத்தால், சிறுபான்மையாக இருக்கிற காரணத்தால் அது ஆட்சி மொழியாகிற தகுதி இல்லை என்று கூறிய கருத்திற்கு அண்ணா அருமையாகப் பதில் சொன்னார்.

இந்த நாட்டில் காகங்கள் நிறைய இருக்கின்றன. மயில்கள் குறைவாக இருக்கின்றன. காகங்கள் நிறைய இருக்கிற காரணத்திற்காக காகத்தையா தேசியப் பறவையாக அறிவித்தோம்? அபூர்வமாக, அரிய

வகையாக இருக்கிற மயிலைத்தானே நாம் தேசியப் பறவையாக அறிவித்தோம்? என்றார்.

அண்ணாவின் உரைகள் சமூக மேம்பாட்டிற்கானவை. சென்னையையும், செட்டிநாட்டையும் ஒருசேரப் பார்க்கிறார். சென்னையில் வீடில்லா மனிதர்கள், செட்டிநாட்டிலோ ஆளில்லா அரண்மனைகள், இப்படி எதுகையும் மோனையும் இரண்டறக் கலந்து பேசுகிற அண்ணாவின் உரைகள் சமூக மேம்பாட்டிற்கானவை.

அண்ணாவின் தொடர்ச்சியாக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தன்னுடைய தொடக்க கால சட்டமன்ற உரை – கன்னிப் பச்சு நங்கவரம் ஏழை விவசாயக் கூலிகளுக்கான உரையாக அமைந்தது. வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க உரை அது.

அமெரிக்காவின் ஆப்ரகாம் லிங்கன் முதல் உலகத்தின் எந்த மூலையிலுமுள்ள மனிதகுல மேம்பாட்டிற்காக உழைக்கிற எந்தத் தலைவரின் உரையும் உண்மையின் உரைகல்லாகத் தான் ஒளிவீசிக் கொண்டிருக்கும். அந்த உண்மையின் உரைகல்லாக ஒளிவீசிக்கொண்டிருக்கிற உரைகள் மனித குலத்திற்கு வழிகாட்டுகிற கலங்கரை விளக்கங்கள்.

அன்பு உயிரியல்பான உணர்வு; ஒழுக்கம். அன்பு உயிரிடத்தில் பொங்கிவழிந்து மற்ற உயிரின்ங்களுக்குப் பாய்ந்து வளப்படுத்துவது. இத்தகைய தூய இயற்கையான அன்பை, வாழ்விக்கும் அன்பை – ஊற்றுக் கண்ணைத் தன்னல நயப்புக்களால் ஆணவச் செருக்குகளால் தூர்த்துவிட்டனர் பலர். அதனால், வீட்டிலும் போர்! நாட்டிலும் போர்! உலக அரங்கிலும் போர்! ஏன் இந்த அவலநிலை? அன்பு, தன்னயப்புணர்வுகளால், விருப்பு வெறுப்புக்களால் எளிதில் திரிபடையக் கூடியது. இன்று மானிடச் சாதியின் வாழ்க்கை திரிபடைந்து கிடக்கிறது. அன்புக்கு உறவும் கூடுதல், குறைவு அளவுப் பரிமாணங்கள் இருக்கும். ஆனால், அன்பு உலத்தில் வேறுபாடு இல்லை; வெறுப்பு இல்லை; பகை இல்லை; குற்றம் இல்லை; சிறிய வட்டங்களைக் கடந்து நிலையாக இருப்பதுதான் அன்பு.

– அருள்நெறித்தந்தை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவாசக உவமைகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

நாங்கூழ்

சிவஞானத்திற் சிறந்த - அறிவாற் சிவனே ஆய மாணிக்கவாசகப் பெருமான் மிக்குயர்ந்த தத்துவங்களை மிக எளிய உவமைகளால் விளக்குகின்றார். உயர்ந்த அறிவு கடுமையாக இருக்கும். ஆனால், உயர்ந்த அறிவோடு அனுபவமும் இருக்குமானால் நிச்சயமாக அந்த அறிவு எளிய வடிவம் பெறும். மாணிக்கவாசகர் சிறந்த அனுபவம் உடையவர்.

நாங்கூழ், உழுத நிலங்களிடையே ஊர்ந்து திரியும் புழு; எலும்பில்லாதது; மெல்லிய தசைகளிலேயே ஆயது. ஆயினும், உழவியல் தொழில் வேளாண்மை செய்யும் குடிமக்களுக்குப் பெருந்துணை செய்வது; மண்ணைக் கிண்டி வளமுறச் செய்வது; அதன் எச்சில் பட்ட மண் நல் உரமுடையது - பல் வளங்கொழிப்பது என்று உழவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். "உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து" என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பேசுகின்றார்.

நாங்கூழ்ப் புழுவோடு உயிரை உவமிக்கின்றார். நாங்கூழ் பூச்சியைப்போல அன்பினால் தகுதிப்பாடடையாத உயிர்கள் எலும்பில்லாப் புழுக்களைப் போன்றனவேயாம் மனித உயிர்கள், பயனுடையன; மனித உயிர்களின் அறிவும் ஆற்றலும் உலகத்திற்கும் பயனுடையன - இறைமைத் தன்மைக்கும் பயனுடையன. கழனிகளுக்குப் பயன்தரக்கூடிய நாங்கூழ் எறும்புகளிடையே அகப்பட்டுக்கொண்டது; எறும்புகள் நாங்கூழ் புழுவை அரித்துத் தின்னுகின்றன. இக்கருத்தினை உயிரியல் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றது. அன்பு என்ற எலும்புரம் பெறாத உயிர் தன்னல வேட்கையின் நிலைக்களனாக இருக்கும். எலும்பில்லாத உடம்பையுடைய நாங்கூழ்ப் புழுவை எறும்புகள் சுலபமாக அரித்துத் தின்பது போல, அன்பில்லாத உயிர்களைப் புலன்கள் அரித்துத் தொல்லைப்படுத்தும். நாங்கூழ் புழுவை எறும்பு அரித்தல் மூலம் அதன் வடிவைச் சிதைக்கிறது - பயன்படு தன்மையை அழிக்கிறது. அதுபோல, புலன்களால் அரிக்கப்பெறும் உயிர்கள் உயிர்களின் இயற்கைத் தன்மைத்தாய வளர்தல், பயன்பெறுதல், நிறைவு பெறுதல் ஆகிய தன்மைகளினின்றும் அழிகின்றன.

எறும்பிடை நாங்கூழ் பட்டு அரிக்கப்படுதலினும் உயிர் புலன்களால் அரிக்கப்பெறுதல் வேதனைக்குரியது என்று மாணிக்கவாசகர் கண்டார். "எறும்பு இடை நாங்கூழ்" என்று குறிப்பிட்டதால், நாங்கூழ் எறும்புகளால் சூழப்பெற்று விட்டன – நாங்கூழால் தப்ப முடியவில்லை என்று பொருள் பெறப்படுகிறது உயிர்கள் புலன்களால் சூழப்படுவதில்லை. சூழ முடியாது; புலன்களினும் ஆற்றல்மிக்க – புழுவுக்கில்லாத அறிவு மனித உயிர்களுக்கு இருக்கிறது. இருந்தும், பயன்படுத்தாமையால் எலும்பற்ற புழு எறும்புகளிடையே சிக்கியது போல, உயிர் புலன்களிடையே சிக்கிக் கொள்ளுகிறது என்ற குறிப்பை உணர்த்துகின்றார்.

நிலத்தை உழுது பயன்காணும் உழவன் நாங்கூழ்ப் புழு தன் நிலத்தில் நெளிவதை விரும்புவான். அதற்குப் பகையாகிய எறும்பை விலக்குவான். அதுபோல, மனித உயிர்களைப் பாதுகாத்துப் பயன்பெறுதல், ஞான உழவு செய்கின்ற ஞான ஏருழவனாக இருக்கின்ற இறைவன் உயிர்களைப் பாதுகாத்துப் பயன்கொள்ளக் கடமைப்பட்டவன். மனித உயிர்களுக்குப் பகையாகிய புலன் அரிப்பைத் தடுத்துப் பாதுகாக்க வேண்டியவன் அவன். புலன் வாழ்க்கை வேறு; புலன் அரிப்பு வேறு, சமய வாழ்க்கை புலன் வாழ்க்கையை மறுக்கவில்லை; புலன் அரிப்பையே மறுக்கிறது. அதனாலேயே "அரித்தல்" என்ற சொல் வழக்கைக் கையாளுகிறார் மாணிக்கவாசகர்.

நாங்கூழ்ப் புழு எறும்புகளிடையே அகப்பட்டால் அரித்துத் தின்னப்பெறும். பயன்படும் புழுவாயினும் அழிக்கப்பெறும். மனித உயிர் அன்பு, அறிவு என்ற எலும்புகளைப் பெறாவிடின் புலன்களால் அரிக்கப்பெறும். எறும்புகளின் அரிப்பிலிருந்து நாங்கூழ்ப் புழுவைப் விவசாயிகள் காப்பாற்றிப் பயன் அடைவது போல, இறைவன் உயிர்களைப் புலன்களின் அரிப்பிலிருந்து பாதுகாத்துப் பயன் கொள்ளுதல் வேண்டுமென்ற கருத்தை மாணிக்கவாசகர் வலியுறுத்துகிறார். அந்த அழகிய பாடல் இதோ :

"எறும்பிடை நாங்கூ ழெனப்புல
　　னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்
　　டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர்
　　வுற்றவர் உம்பரும்பர்;
பெறும்பத மேயடி யார்பெய
　　ராத பெருமையனே!"

(தொடரும்)

— — —

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஞானாமிர்த சாரம்

குன்றக்குடியில் 29.12.1939இல் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாசக் கருத்தரங்கச் சொற்பொழிவு

(உரைவேந்தர். ஒளவை. துரைசாமி பிள்ளை)

ச்சமாசத்தின் "சிவநெறிச் சிந்தனை" தொகுப்பு நூலிலிருந்து

இனி, பாசச்சேதமாகிய ஞானநெறியை விளக்கத் தொடங்கும் ஆசிரியர். ஆன்மாவை அனாதியே பிணித்துக் கொண்டு கிடக்கும் ஆணவமலம் நீங்குமாறு யாதெனக் கூறத் தொடங்கி,

"உயிர்தொறும் நின்றக் கண்ணும், விளிதரும்;
தன்னுடைக் காலம் துன்னில் பின்னிடும்
வலியின் தகுதித்து" — ஞானா-19

என்கின்றார்.

வன்மையுடைய பொருளொன்று, பிறிதொன்றைப் பற்றி இருக்குங்கால். அது பக்குவமடையும் வரையில் பற்றியிருந்து, வந்தவழி நீங்குவது சிறப்பு ஆதல் குறித்து. "பின்னிடும் வலியின் தகுதித்து" என்றது குறிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு மலத்தைக் கெடுத்தற்காக வந்து பற்றும் மாயா மலத்தின் இயல்பு கூறுவார். உலண்டுப் புழுவை எடுத்துக்காட்டி.

"நுண்ணூற் பேரில் இழைந்து அகப்படுபு
தன்முதல் கெடூஉம் எண்ணாக் கீடத்து
இறும்பூத யார் அஃதறிந் திசினோரே"

என்று விளக்குகின்றார். உயிரைப் பற்றியுள்ள அழுக்கைப் போக்குவது குறித்து வேறோர் அழுக்கு வடிவாய்ப் போந்து. அவ்வுயிர்க்குத் துணை செய்யும் இயல்புடைமை காணாது. பலரும் அதனை அத்தகைய துணையாகக் கருதாது. அதற்கே அடிமையாகிக் கழிக்கின்றனர் என்பார். "யார் அஃது அறிந்திசினோரே" என்கின்றார்.

இனி, தனுகரணாதிகளைக் கொண்டு ஆன்மா போகத்தை நுகருமிடத்துக் கன்மம் பிறக்கின்றது. கன்மமாவது நல்வினை தீவினை என்ற இரண்டுமாகும். இவ்வினை மலமாயை காரணமாக வருவது குறித்து, இந்நூலாசிரியர், "களியிடைக் கலித்ததென்ப,

விளிவருங்குரைய இவ்விரு வினைத்திறனே" என்கின்றார். இவ்வினைகளைச் செய்யுமிடத்து நன்மை தீமைகள் தோன்றி, உயிரின் கட் கிடந்து, தம்மை நுகர்விக்கும் தன்மையுடையவாகும். இவை எவ்வாறு உயிர்களைப் பற்றி நிற்கின்றனவெனின், இதற்கு மூன்று பொருள்களை எடுத்துக்காட்டுகின்றார்.

"ஆடிப், பேரிருள், புடம்மடிகூடிய குற்றம்
கோடேந் தல்குல் மாதோர் பாகற்
சேர்வோர் இன்பம்" - ஞானா - 25

போல இவை செறிந்திருக்குமென்றும், இவை பின்னர் விரிந்து உயிர்களுக்குப் பயன் தரும் திறத்தை, உச்சிப்போதில் நிழல் அடிக்கீழ் ஒடுங்குவதும், கற்ற கல்வி உள்ளத்தில் ஒடுங்குவதும், ஆலமரம் வித்தில் ஒடுங்குவதும்போல, ஒடுங்கிக் கிடந்து விரியும் என்றும் கூறுவார்.

"பாதவக் கண்ணிழல், பனுவல், கோளிப்
பெரும்பணை பொதிந்த சிறுநுண வித்தின்
இருந்தவை விரியும்" - ஞானா - 25

என்கிறார்.

இக் கன்மங்கள் சுயங்கன்மம், பூர்வகன்மம் என இருவகைப்படும். இவற்றுள் சுயகன்மம் உண்மை ஞானத்தால் சார்பின்றிக் கெட்டழியும். பூர்வகன்மத்தை நுகர்ந்தே தீர்தல் வேண்டும். நெய்யாகியது வெண்ணெயும், திருநீறாகியது சாணமும் ஆகாதவாறு போலப், "போகாதம்ம புராதனம்" (ஞானா-41) என்று ஆசிரியர் கூறுகின்றார். பூர்வ கன்மங்களுள் பக்குவப்படாதவை. ஆன்மா மெய்யுணர்வு பெற்றவழி, சார்பில்லாமையால் கெட்டழிந்து விடும்.

இனி, இக்கன்மங்களைக் கெடுத்தற்கு வழி யாது என நிகழும் அவாய்நிலையை ஓர்ந்து, இந்நூலாசிரியர் ஓர் உபாயமும் கூறுகின்றார். நிகழும் நலந்தீங்குகளுக்குக் காரணம் ஊழே என நினைந்து வினையின்பால் விருப்பு வெறுப்புக் கொள்ளாதொழிய வேண்டும்.

"....... மாறெழுந்து
உடம்பிடி உடல் துணி படுப்பினும், விரையொடு
மலைய சாந்தும் வழுத்தும் கொண்டு
தலையிற் பாதம் தாங்கினும், "உலையாப்

பிறவிப் பிணிதணி அறவணர் இவ," ரென
விளையா இன்பம் விளையின் அல்லதை,
உளைவதை யுடையரோ வினையுணர்ந்தோரே" - ஞானா - 37

என்றும், இவ்வியல்பினால், உணர்வு மிகுந்து வருவோர்க்கு, வினைப்பற்றுக்கு ஏதுவாகிய உடல் முதலியவை வேறாய்த் தோன்றும்; தமக்கென ஓர் உருவின்மையும், தம்மைப் பின் எப்பொருளும் நலந்தீங்குகளுக்கு அடிப்படுத்த இயலாதென்பதும் விளங்கும்; அதனால்,

"உருவில் ஓர் உயிருக்கு உடலுநர் உழையரென்
றிருவே றுரைப்பதை யெவனோ? - ஞானா - 35

என்றும் கூறுகின்றார். இவ்வாறு உணர்ந்து அவ்வுயிர்பாலும் எப்பொருள்பாலும் காய்தல் உவத்தல் கொள்ளாதவரே உண்மை ஞானத்துக்கேது உடையவராவர். அவ்வாறு இல்லாத மக்கள் நாயினும் கடைப்பட்டவர் என்பார்.

"அளியரோ அளியர்தாமே, தெரியாது
இளையோன் எறிந்த குணில்வாய்ச் செல்லாது
இளையோற் சினவும் வளைவாய் ஞமலியின்
அளியரோ அளியர் என்னை,
ஒளிகொள் காரணம் உன்னா தோரே" - ஞானா - 35

என்கின்றார்.

இவ்வாறு கன்மச்சேத உபாயத்தால் வினைப்பயன் நுகர்ந்து வருமுகத்தால் வினையொப்புண்டாகும். பற்றி நிற்கும் மலங்களும் அதனால் கெடுதற்குரிய பரிபக்குவம் எய்த, நல்லுணர்வு பரமனால், தன்மை, முன்னிலை என்ற நிலைகளுள் ஒன்றின் வழியாகக் கொள்ளப்படுகிறது. அதனைப் பெற்றுச் சிறக்கும் மேலோர்கள், ஏனையோரைப் போலவே, நின்றவினை அறக்கெடும்வரையில் செய்வன செய்து வருவார்கள். ஆனால், அவற்றால், அவர்கள் வினைவயப்பட்டுத் தீது அடைவது இலர் என்பார்.

"ஞான மாக்கழல் யாணுறை வீக்குநர்
விடய வேலைத் தடையின்று படியினும்,
தீதொடு படியுநர் அல்லர்;
மாதுயர் கழியுநர், நீதி யானே" - ஞானா - 44

என்கின்றார். விடயவேலையில் படிந்து செய்வன செய்பவர்

எவ்வாறு வினையால் பற்றப்படுபவதிலர் என்றோர் ஐயம் நிகழ்கின்றது இதற்கொரு சிறந்த உவமை கூறுகின்றார். சுற்றிவிட்ட குலாலன் சக்கரம் தானே வினைப்பயனின்றிச் சுழலுதலும், காயமிருந்த பாண்டம் மணநாறுதலும்போல, வினைசெய்து பயின்ற உடல், தானே அதனைச் செய்கின்றதேயன்றி, அதன் பயனைப் பெறுவதில்லை என்பார்.

"*மண்வினை மாக்கள் தம்வினை முடிமார்*
திகிரி யுருட்டி யொருவி யாங்கும்
வருதல் ஓவாமாறும், குவிவாய்த்
தசும்பு இங்கு ஆங்கு அசும்பறத் துடைத்தும்
இருங்கடி யிகவாப் பெருங்கட னல்லதை
உடையதை உடையரோ மற்றே" - ஞானா - 48

என்கின்றார்.

அங்ஙனமாயின், தனுகரணாதியோடு கூடியிருப்பதால், அவர் மனத்து நிகழும் எண்ணந்தான் யாதாகும் எனின், "உருவில் உயிர்" எனத் தம்மை எண்ணி, தான் அடைதற்குரிய சிவத்தையே நினைந்து பயின்று, அதனைக் கூடுநாள் எந்நாளோ என்ற எண்ணமே உடையராய் இருப்பர் என்பார்.

"*.......உரைதுடக்கு*
உணர்வொடு கழிந்து இணையில் இன்பத்து
என்றுகொல் எய்து ஞான்றென்று நன்றும்
வடுநீங்கு சிறப்பின் வயங்கியோரே" - ஞானா - 47

என்கின்றார். அவர் மனத்துப் பந்தகாரணமமதை சிறிதுமின்றி முத்தி காரணமான மமதையே தலைசிறந்து நிற்கும். இதன் உண்மையினை, நம் அப்பமூர்த்திகள்.

"*இறுமாந்திருப்பன் கொலோ - ஈசன்*
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்தி தன் சேவடிக்கீழ்ச்சென்று
இறுமாந்திருப்பன் கொலோ"

என்று அருளியிருத்தல் வற்புறுத்துகின்றது.

(தொடரும்)

குருவருள் அருளிய வழிபாட்டு விளக்கம்

(தருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

"திரிகரணமாகக் கூறப்பெற்ற மனம், மொழி, மெய் என்ற மூன்றனுள், மனத்தை உள்ளம் என்று குறிப்பிடுகிறோம். அந்த உள்ளத்தை நிலையிலாச் செயலில் ஈடுபடுத்தாமல் நிலையுள்ள செயலில் ஈடுபடுத்தி உண்மைப் பொருளை அடையவேண்டும்".

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற திருக்குறளில் உள்ளம் மெய்மையில் நிற்பதாகிய, உள்மெய்யின் (உண்மை) உயர்வைக் காண்கின்றோம். வாயினால் மெய்யான பொருளை எடுத்து ஓதுதலே வாய்மெய் எனப்படுகிறது. மெய்யால் (உடலால்) மெய்யான செயலைச் செய்தலே மெய்மை எனப்படுகிறது. மெய்யாக என்றும் நிலைபேறாக உள்ள உயிர்கள் அறியாமையால் கட்டுண்டு கிடக்கின்றன. அவை நிலைபேறுடையதாய், எல்லாம் வல்லதாய், நுட்பமாய் உள்ள பரம்பொருளை, நாள்தோறும் உள்மெய், வாய்மெய், மெய்மை ஆகிய மூன்றாலும் நினைத்து வழிபடின் அப்பரம்பொருளை அடைந்து இன்புறும்,

இதனை,

"பாரா அட்டாங்க பஞ்சாங்க விதிமுறையால்
பணிந்து உள்வாய்மெய்
நேராகச் சூழ்ந்துடலம் கம்பித்துக் கும்பிட்டு
நிருத்தம் செய்து
தாராரும் தொடைமிதப்ப ஆனந்தக் கண்ணருவி
ததும்பநின்று அன்பு
ஆராமைக்கொள்ள அஞ்சலித்துத் துதிக்கின்றான்
அமரர் கோமான்"

என்ற பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணப் பாடலால் இனிது அறியலாம் என்று தருமையாதீன மூத்த குருமகாசந்நிதானம் திருவாரூர் கொண்டபிரான், மதுரையில் தொடர்ந்து நிகழ்ந்த புராண விழாவின் நிறைவு விழாவில் அருளிச்செய்த அருளுரை அரிய ஆய்வுரையாகும்.

வழிபாட்டின் நுட்பத்தைப் பேசும் புறநானூற்றுப் பாடல்வரி ஈண்டு சிந்தனைக்குரியதாகும்.

"வழிபடுவோரை வல்லறி தீயே" (புறம் 10) என்ற தொடர்க்கு உரையாசிரியர், "வழிபடுவோரை வல்லறிதீ" என்றது, "அறிந்து அவர்களுக்கு அருள்செய்" என்பதாம். "அறிதி" என்றதற்கு உரைநயம் "ஒருவாரணம் அழைப்ப, நீயோ வந்தேனென்றாய்" என்ற கம்பராமாயணம் (விராதன்-49) பாடலைக் கொண்டு "அறிதி" என்பது செயலைக் குறிக்கும் என்பது, உ.வே.சா. தரும் குறிப்பாகும்.

தேவாரம் இப்பொருளை வழிமொழிதல்

திருத்து முத்தியில், சுந்தரர் அருளிய பதிகத்தில் இறைவனை, "சொன்னவாறு அறிவார் துருத்தியார்" என்ற தொடரில் "அறிவார்" என்ற சொல்லுக்கு "அதன் காரியம் தோன்ற நின்றது"- என்று தருமை ஆதீன உரையில், "நினைத்தலும் அறிதலும் செய்தலோடு ஒக்கும்" என்று பரிமேலழகர் உரை வழங்குவார். என்ற உரைக் குறிப்புக்கொண்டு இறைவன் முன் வழங்கும், வழிபாட்டு விண்ணப்பம் செயல்முறைக்கு வந்த வரலாறு மூர்த்தி நாயனார் வரலாற்றுக் குறிப்பிலும், சம்பந்தர் ஆலவாய் அண்ணலிடம் "ஞாலம் நின்புகழேவேண்டும்" என்று எண்ணிய விண்ணப்பம் செயலுக்கு வந்ததையும் வரலாற்றால் அறியலாம்.

செல்வங்கள் எல்லாம் அறிவாற் படைக்கவுங் காக்கவும் படுதலின் அஃது உடையாரை வள்ளுவர் "எல்லாமுடையார்" என்றார். அவையெல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும், அழியாமற் காத்தற்கும், தெய்வத்தான் அழிந்து படைத்தற்கும் கருவியுடையரன்மையின், அறிவு இல்லாதாரை, "என்னுடையரேனுமிலர்" என்றும் கூறிய திருக்குறள் கருத்தும் சொல்லாட்சியும் சிவநெறி வழிபாட்டில்,

"அறிவே நின்னை அல்லால்
அறிந்து ஏத்த மாட்டேனே" என்று

சுந்தரரும்,

"அறிவிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே"

என்று வாதவூரரும் வழங்கிய கருத்துகள் வழிபாட்டின் நுட்பத்தை உணர்த்தும். சைவமரபில் "சந்நிதானம்" என்ற திருப்பெயர் நடமாடும் குருபிரான் இருவேளையும் கோயில் வழிபாடு செய்து குருவருள் வழங்குவதால்தான் "குருமகாசந்நிதானம்" என்று அழைக்கப்பட்டு வருவது வழிபாட்டின் பெருமையை உணர்த்தும்.

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்ற பொன்மொழியை, சமய குரவரில், மூவர் முதலிகள் நூற்றுக்கு நூறு தமிழ்நாட்டுக் கோயில்கள் மட்டுமின்றி, வடநாட்டுத் தலங்களையும் வழிபட்டு, பதிகத்தால் பரவி வழிபட்ட மரபு சங்க நூல்களில், முருகாற்றுப்படை தவிர வேறு இல்லை. "இவர்களே பொய்யடிமையில்லாத புலவர்கள்" என நாம் அடையாளப்படுத்தலாம். "பொய்மையாளரைப் பாடாதீர்" என்று சுந்தரர் தமிழ்ப் புலவர்களை வேண்டுதலாலறியலாம். அப்பரடிகள் தாண்டகம் ஒன்றில்,

"ஒருக் காலும் திருக்கோயில் சூழாராகில்
ஏன்பிறந்தார்"

என்று வழிபாட்டை வற்புறுத்துவார். சம்பந்தர் வழிபாட்டின் சிறப்புகளை அருளிப்பாடுகள் பெறும் முன்பும், பெற்றபின்பும், அவரே செய்து காட்டும் பெரிய புராணச் சம்பவங்கள், இன்றும் தருமையாதீன மூத்த குருமூர்த்திகள் குருபூஜை நாட்கள் உட்பட, வழிபாட்டில் திளைப்பதை அன்பர்கள் அறிவார்கள்.

இறைவனைப் புகழ்ந்து பாடுபவர், பணிந்து வணங்குவர், பல்லாண்டு கூறும் பத்தர்கள் ஆகியவர்களிடம் சிவம் பிரகாசிக்கும் என்று சம்பந்தர் திருவாரூர்ப் பதிகத்தில் பதிவு செய்வார். ஆக்கையாற் பயன் வழிபாடே என்று அப்பர் முடிவுரை நல்குவார்.

குருவழிபாட்டால் சிவம் பிரகாசிக்கும். அதற்குக் கோயில் வழிபாடு முதற்படியாகும். குருவருளும் திருவருளும் வழிபாட்டால் எய்தும் என்பதை இளங்கோவடிகள்

"தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப்பேணுமின்" என்று நம்மை ஏவி வழிபாட்டை வற்புறுத்துவார். தொல்காப்பியரும் வாழ்வின் நிறைவு "சிறந்ததுபயிற்றல்" என்று வழிபாட்டை வழிப்படுத்துவார். வழிபாட்டால் பத்திமையும், அடிமை உணர்வும் பெற்று, "நீடுவாழலாம்" என்பது தமிழர் பண்பாட்டின் உச்சமென, சமயகுரவர் நடந்து காட்டிய வழியே ஆதீனங்களாகும். ஆதீனக் குரவர்வழி ஆசிபெற முயற்சிப்போமாக.

★

முருகப்பெருமானைத் தரிசித்து அருள் பெற்ற பாம்பன் சுவாமிகள்

(பாம்பனார் – வாரியார் அடிப்பொடி. செ.வே.சதானந்தன்)



பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் (1848-1929) அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதீக, சைவசித்தாந்த ஞானபானுவாய் விளங்கிய அருளாளர். முருகப்பெருமான் ஒருவனையே முழு முதற்கடவுளாக வழிபட்டவர். மக்கள் துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமும் பெற வேண்டுமென்ற கருணை உள்ளத்தால் சாத்திரமாகவும், தோத்திரமாகவும் 6666 பாடல்களையும் 32 வியாசங்களையும் அருளியவர்.

உலக மக்கள் அறியாமையிலிருந்தும் விலங்கு உணர்வுகளிலிருந்தும் விடுபட்டு பண்பட்ட அன்புள்ளத்தோடு அறவாழ்க்கையைக் கடைப்பிடித்து, சாந்த சீலர்களாய், ஒழுக்கமுள்ள உத்தமர்களாய், மனித நேயம் கொண்டவர்களாய் வாழவும், நாட்டில் ஒற்றுமையுணர்வு மேலோங்கி அமைதி நிலவவும் அறிவுரை வழங்கி நலவழி வகுத்து வாழ்ந்த் அருளாளர்.

சுவாமிகள் இசைத் தமிழிலும், இயல் தமிழிலும் சிறந்து விளங்கியவர். பல தெய்வ வழிபாட்டினைக் கண்டித்து "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கருத்துடையவர். ஆன்ம நெறிக்குத் தடையாய் இருப்பது சாதி அபிமானமே என்று உரைத்தவர். சாதி வேறுபாடுகளை அறவே வெறுத்தவர்.

"இரை தேடுவதோடு இறையைத் தேடு" என்று சுவாமிகள் அறிவுறுத்தினார்கள். பாம்பன் சுவாமிகள் பாடல்கள் முருகப் பெருமானால் அங்கீகரிக்கப்பட்டவை. "இறைவன் என்முன் வெளிப்பட்டு அருளிய உபகாரமும், உறுதிமொழிகளும் பல. என் பாடல்கள் அவனால் அங்கீகரிக்கப்பட்டது பிரசித்தம்" என்று தாம் அருளிய "செவியறிவுறூஉ" என்ற நூலில் கூறியுள்ளார்கள். "நான் பாடும் பாட்டை நவில்பவர்க்கு நலம் நல்காய்" என்றும் பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானைத் துதித்து உலகர்க்காகவே வேண்டும் அருள்நிலை பரமாசாரியராகவும், சமுதாய மேம்பாட்டு சிற்பியாகவும் திகழ்ந்தவர்.

நிஷ்டையும், முருகப்பெருமான் தரிசனமும்

முருகப்பெருமானைக் கனவிலும், நினைவிலும் பலமுறை தரிசித்தவர். 1884ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இராமநாதபுரத்தை அடுத்த பிரப்பன்வலசை என்ற சிற்றூரிலுள்ள மயானத்தில் ஆறு அடிச் சதுரக்குழியில் 35 நாட்கள் ஊண், உறக்கமின்றி தொடர்ந்து நிட்டை செய்து முருகப்பெருமானை நேரில் தரிசித்து அவரிடம் உபதேசம் பெற்றார்.

"35 நாள் காணுந் தனி நிட்டையில் காத்திருந்த ஞான்று கௌபீனதாரியாய் வெளிப்பட்ட இறைவன் எமக்கொரு மொழி உணர்த்தியளருளினன்" என்று தம்முடைய "தகராலய ரகசியம்" என்னும் நூலில் கூறியுள்ளார். "ஞான மார்க்க மூலமே வீடுபேறு (முக்தி) அடையலாம்." புறப்பூசனைகளினால் வீடு பேறு அடைய முடியாது. "அகப்பூசை முத்திப்பேற்றைத் தரும்" என்று விளக்கியுள்ளார்.

மயூரவாகன சேவனம்

அவர்களின் தூய பக்தியையும், அவர்கள் இயற்றிய "சண்முக கவசத்தின்" மகிமையையும், முருகப்பெருமான் தம் மெய்யடியார்களுக்கு அருளும் கருணையையும் மக்கள் அறியும் வண்ணம் சென்னையில் முருகப்பெருமான் ஒரு திருவிளையாடல் புரிந்தார். 27.12.1923 தேதியில் வடசென்னை, தம்புசெட்டித் தெருவில் வேகமாக வந்த குதிரை வண்டி சுவாமிகளின் மீது மோதியதால் அவரது இடது கால் எலும்பு முறிந்துவிட்டது. (compound fracture) இரத்தப்பெருக்கோடியது. சுவாமிகள் கலங்கவில்லை. மருத்துவம் செய்து குணப்படுத்தி வாழ நினைக்கவில்லை. இத்துடன் உடற்பற்றும், உயிர்பற்றும் உலகப்பற்றும் ஒருங்கே ஒழிந்து விட்டன என்றும், மீண்டும் பிறவித்துன்பம் வாராது என்றும் எண்ணி, முருகப்பெருமான் திருவடி மலர்களையே சிந்தித்து மகிழ்ந்தார்கள்.

இந்த விபத்தைக் கண்ணுற்ற சுவாமிகளின் அன்பர் சுவாமிகளைச் சென்னை அரசு பொது மருத்துவமனையில் (government general hospital) 11-ம் எண்ணுள்ள மன்றோ வார்டில் சேர்த்தார். சுவாமிகள் 73வயது மேற்பட்டவர் என்பதாலும், உப்பு அற்ற உணவையே உண்பவர் என்பதாலும் அவர்களின் முறிந்த எலும்பு ஒன்று சேராது என்றும் அறுவைச் சிகிச்சையைச் செய்ய வேண்டுமென்றும் ஆங்கிலேய மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அக்கருத்தை ஏற்காமல் சுவாமிகள் முருகப்பெருமானையே சிந்தித்த வண்ணமாய் இருந்தார்கள்.

அரசு பொது மருத்துவமனையில் சுவாமிகளுக்கு மருத்துவம் செய்யத் தொடங்கினர். மருத்துவமனையில் சேர்ந்த 11ஆம் நாள் இரவில் முருகப் பெருமானின் பெரிய மயில் ஒன்று தனது தோகையை நல்ல வட்ட வடிவமாக விரித்து, அழகிய வானை மறைத்தும், அதன் இடப்பக்கத்தில் உடன் வந்த மற்றொரு மயிலும் சேர்ந்து நடனமாடிய அழகிய காட்சியைச் சுவாமிகளுக்கு முருகப்பெருமான் காட்டியருளினான். மயில்களின் கால்கள் தரையில் பதியவில்லை. அவைகள் பொன்மய பச்சை நிறமாக இருந்தன.

விண் மகிந்திட வேல்விடு வேள்மயில்
கண்மகிழ்ந்து எழல் தாசற்குக் காட்டினார்;
மண் மகிழ்ந்திட, மாகம் மகிழ்ந்திட
எண்மகிழ்ந்த பன்னொன்றின் இராவிலே

அசோக சாலவாசம் - பாடல் 5-7

அவர் மனம் மகிழுமாறு ஓர் இரவில் செவ்வேட் பரமன் ஒரு சிவந்த நிறக் குழந்தை வடிவில் தோன்றி சுவாமிகள் படுத்திருந்த படுக்கையில் தலைவைத்துக் காலை நீட்டிப் படுத்திருந்தான். அத்திருக்காட்சியைக் கண்ட சுவாமிகள் குழந்தையாக வந்தவன் முருகப்பெருமானே எனும் நுட்பத்தை அறிந்த பின்பு அவன் மறைந்துவிட்டான்.

பிறகு அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் எக்ஸ்ரே படங்கள் எடுத்து ஆராய்ந்து எலும்பின் ஒடிந்த பகுதி கூடி வருவதைக் கண்டு மகிழ்ந்தனர். இன்னும் பதினைந்து நாட்களுக்குள் புண் ஆறிவிடும். அதுவரையிலும் மருத்துவமனையை விட்டுச் செல்லக்கூடாது என்ற நாதம் முருகப்பெருமானிடத்திலிருந்து சுவாமிகள் மகிழும்படி தோன்றியது.

"வானம் இடிந்து தலையில் விழும்படி வம்பு வந்தாலும் அந்தக் கானமயில் முருகையன் திருவருள்கைவிட மாட்டாதே" என்று தாம் அருளிய போதனையில் உறுதியாக இருந்தார். பிறகு மருத்துவமனையை விட்டு தம் சீடர்கள் இல்லத்தில் தங்கினார். சுவாமிகளின் முறிந்த கால் குணமானது கண்டு அன்பர்கள் மகிழ்ச்சி கொண்டனர்.

முன்பு காலனை (இயமனை) உதைத்த சிவபெருமானின் மகனாக நிலைபெற்றாய் என்றும், அவனது காலை அடைக்கலம் அடைந்தவரை நன்கு காத்தருளினாய் என்றும், தனது முறிந்த காலை நன்கு குணம் பெறச்செய்தாய் என்றும் கூறி இனி எக்காலத்திலும் அவனுடைய காலைத் தனக்கு அளித்தருள்வாயாக என்றும் சுவாமிகள் வேண்டினார்.

"முன்காலை உதைத்தவன் கால் முளையாய் நின்றாய்
பின்காலை அடுத்தவரைப் பெரிதும் காத்தாய்
என் காலை இனிது அளித்தாய், இனி எஞ்ஞான்றும்
நின்காலை எனக்கு அளி என்றான் அந்நீத்தோன்"

அசோக சாலவாசம் - பாடல்7-4

இந்த அற்புத தெய்வீக நிகழ்ச்சி மேற்கண்ட மருத்துவமனை 11-ஆம் வார்டில் 26.12.1981-ல் டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம் M.D.F.R.C.P. அவர்களால் திறக்கப்பட்ட கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அக்குறிப்பின் வாசகங்கள் வருமாறு.

"பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் கால் முறிவுண்டு சென்னை பொது மருத்துவமனையில் 11வது வார்டு (மன்றோ வார்டு) 11வது படுக்கையில் 27.12.1923 அன்று சேர்க்கப்பட்டு அறுவைசிகிச்சை செய்து குணப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முருகப்பெருமான் திருவருளால் 11ஆம் நாள் இரவு (06.01.1924) வளர்பிறைப் பிரதம திதியும், பூராட நட்சத்திரம் சேர்ந்த நன்நேரத்தில் சுவாமிகள் மயில் வாகனக் காட்சி கண்டு அறுவைச் சிகிச்சை இல்லாமலே பூரணம் குணம் பெற்றார். அந்நாள் மயூரவாகன சேவன விழாவாக ஒவ்வோராண்டும் சுவாமிகள் காலம் தொடங்கி விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவை "அசோகசால வாசம்" (80 பாடல்கள்) நூலில் சுவாமிகள் விளக்கியுள்ளார். பாம்பன் சுவாமிகள் அருளிய பாடல்களில் பக்தர்கள் வழிபாட்டில் பயன்பெறும் சிலவற்றை கீழே குறிக்கப்பட்டுள்ளன.

குமாரஸ்தவம்

கந்தபுராண சுருக்கம், 44 மந்திரங்களால் முருகப் பெருமானை அர்ச்சித்து அவனுடைய திருவடியை அடைய வழிவகுக்கிறது.

சண்முககவசம்

பகை, பயங்கரம், பாவம், வறுமை, நோய் முதலியவற்றிலிருந்து நிவாரணம் பெறச் செய்வது "நீ பாராயணம் செய்கின்ற மகா மகிமையுடைய சண்முக கவசம் ஒன்று மட்டுமே நின்னைக் காத்து அக்கதியிற் சேர்க்குமே" பாம்பன் சுவாமிகள்.

பகைகடிதல்

பகையை வெல்லவும், திருமயிலின் மீது முருகனைத் தரிசிக்கவும் உதவுவது.

அட்டாட்ட விக்கிரக லீலை

"உரோக நாசம், பர்வ நாசம், சத்துரு நாசம், ஆயுள் விருத்தி, தைரிய விருத்தி, வீரிய விருத்தி, புத்திர வயோருத்தி, புண்ணிய விருத்தி உண்டாவதோடு சர்வார்த்த சித்தியும், முத்தியும் வாய்க்கும் என்பது வாய்மை" பாம்பன் சுவாமிகள்.

வேற்குழவி வேட்கை

புத்திர தோட நிவர்த்தி, சந்ததி விருத்தி அடையச் செய்வது.

திருக்கயிலாய திருவிளையாடல்

சிறுவர்கள் உடல்வன்மை, கல்வி அறிவு பெறுதல்

பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம்

ஆயுள் வளர்த்தல், மோட்சம், சுகம் பெறுதல்

துக்கரகித பிரார்த்தனை

பல்வேறு துக்கங்களிலிருந்து விடுதலை அடைதல்.

சரவணப்பொய்கை

குழந்தைகளின் பாலாரிட்ட தோஷங்கள் நீங்கும்.

திருநெல்வேலிக் கோவில் பதிகம்

தாழ்வுற்ற குடும்பங்கள் மீண்டும் மேல்நிலை அடைய உதவுவது.

சுவாமிகள் திருவான்மியூரில் சமாதியாதல்

29.05.1929 தேதியில் இரவு நெடுநேரம் விழித்திருந்த சுவாமிகள் இரவு 2 மணிக்கு தமக்கு அருகிலிருந்த சீடர்கள் இராஜாபாதர் முதலியாரையும், மதுரை முதலியாரையும் நோக்கி, "மயூரவாகன சேவகன் விழாவை விடாது நிகழ்த்தி வாருங்கள். என்னுடைய உடலைத் திருவான்மியூரில் சேர்த்து விடுங்கள்" என்றார்கள். மறுநாள் வியாழக்கிழமை (30.05.1929) காலை 7.15 மணிக்குச் சுவாமிகள் யாவரும் அறியவே சுவாசத்தை உள்ளுக்கு இழுத்தார்கள். அது வெளிவராமல் உந்தியிலேயே எழும்பி அடங்குவதாயிற்று.

மறுநாள் (31.05.1929) வெள்ளிக்கிழமை புஷ்ப விமானத்தில் சுவாமிகள் எழுந்தருளி காலை 8.15 மணிக்கு சென்னை, திருவான்மியூர் சேர்ந்து சமாதி நிலையத்தில் அமர்ந்து அருள்பாலித்து வருகிறார்கள். அச்சமாதி நிலையத்தில் சுவாமிகளால் நிறுவப்பட்ட மஹாதேஜோ மண்டல சபையினர் (15/88) தொடர்ந்து வழிபாடு செய்து வருகின்றார்கள். — —

அரனடி அடைந்த
தத்புருஷசிவம் (சொ. கிருஷ்ணன்) அவர்களுக்கு
"மக்கள் சிந்தனை"யின் அஞ்சலி

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் 45ஆவது குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) அவர்கள் தொடங்கிய அருள்நெறித் திருக்கூட்டத் தொடக்க காலமுதல் திருச்சிராப்பள்ளி மாவட்ட அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளராக இருந்து பணி செய்தவரும் பின்னர் ஆசாரியாபிஷேகம் பெற்று தத்புருஷசிவம் என்ற திருநாமத்துடன் திருவானைக்காவல் பன்னிரு திருமுறை வார வழிபாட்டுக் கழகத்தின் கௌரவத் தலைவராக அமர்ந்து பணிசெய்தவருமான தத்புருஷசிவதேசிகர் சிவ.சொ.கிருஷ்ணன் அவர்கள் தம் 97 ஆம் அகவையில் 23.5.19 அன்று இறையருளுடன் கலந்துவிட்டார்கள். இப்பெரியார் திருப்புத்தூர்த் திருமுறை விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமானாரால் "திருத்தொண்டர்" பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றவர். இப்பெருமகனாரால் ஆற்றியுள்ள சிவத் தொண்டு காலத்தால் அழியாத பெருமையுடையது. அவரை நினைந்து "மக்கள் சிந்தனை" அஞ்சலி செய்கிறது. – ஆசிரியர்

எந்த ஒரு தனி மனிதனின் அல்லது இனத்தின் அறிவாற்றலும் உழைப்புத் திறனும் அவர்களுடைய சொந்த முயற்சியால் மட்டுமே பெற்றதல்ல. அதனால் அவை அவர்களுக்கு மட்டுமே உரிமையுடைனவும் அல்ல. மனிதகுல நிகழ்வுகள்தாம் அறிவாற்றலுக்கும் ஆள்வினைத் திறனுக்கும் ஊற்றுக் கண். ஆதலால் அறிவும் ஆற்றலும் மனிதகுலத்துக்குப் பொது. அறிவு, ஆற்றல் துணைகொண்டு படைப்பனவும் பொதுவேயாம். மனிதனை அறிவுடையவனாக, ஆற்றலுடையவனாக வளர்த்தது மனிதகுல வரலாறு. இது உண்மை.

– அருள்நெறித்தந்தை

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – XII

(தமிழாகரர். தெ. முருகசாமி)

தொல்காப்பியம் காலப் பழமையான நூல். அது முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் உள்ளதொரு நூல் - இதனைப் பல்துறை அறிவு சார்ந்த இளங்கோவடிகள் தேர்ந்து தெளிந்து முத்தமிழ் மாகாவியமாகப் படைத்துள்ளார். இங்ஙனம் படைத்ததில் பிற எவருக்கும் இல்லாத தனிச்சிறப்பு இளங்கோவடிகளுக்கே உள்ளது எனலாம். அதுதான் – கதை நிகழ் காலமும் கதையைப் படைத்த நூலாசிரியர் காலமும் ஒன்றென உணருமாறு படைத்த தனிப்பெருமை. இவ்வுண்மை வஞ்சிக் காண்டக் காட்சிக்காதையாலும் வரந்தரு காதையாலும் உணரப்படும்.

மலை வளம் காணவந்த சேரன் செங்குட்டுவனிடம் குன்றக் குறவர்கள் தாம் கண்ட பெண்ணொருத்தி வேங்கை மரத்தின் அடியில் இருந்தவாறு வானுலகு எய்தியதைக் கூறினார். இதுபற்றிய விரிவை அரசனின் அருகிருந்த தண்டமிழ்ச் சாத்தனார் கூற, இது தொடர்பானதொரு நூலை உடனிருந்த இளங்கோவடிகளைப் படைக்குமாறு வேண்டியதால் நூல் படைக்கப்பட்டது. இக்கருத்து நூலின் முகப்பில் உள்ள பக்கத்திலும் கூறப்பட்டுள்ளது.

மேலும் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டி முடித்ததும் இளங்கோவடிகள் கண்ணகி சிலையைச் சென்று வரம் பெற்றதாக அவரே "யானும் சென்றேன் என் எதிர் எழுந்து "(171) என்றதால் கதை நிகழ் காலமும் நூலாக்கக் காலமும் ஒன்றே என உணரப்படுகின்றன.

இங்ஙனம் கதை நிகழ்வும் நூலாக்கலும் ஒரே காலத்தைக் கொண்ட இந்நூலைத் தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவரான நச்சினார்க்கினியார் மட்டும் தொல்காப்பியர் செய்யுளியல் கூறும் தொன்மை வனப்புக்கு எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். பிற உரையாசிரியர்கள் கூறும் இராமாயணம், பாரதம், தகடூர் யாத்திரை என்ற நூல்களோடு சிலப்பதிகாரமும் அதன்பாற்படும் என்பது நச்சினார்க்கினியர் உரையாகும்.

நச்சரின் இக்கருத்தைக் கதை தழுவிய அளவில் உணரவேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில் தொன்மை அல்லது தொன்மம் என்பது (myth) பழங்கதை மேல் செய்யப்பட்டு வருவது எனப் பொதுப்படக் கருதப்படுவதால் இக்கருத்து இராமயண பாரத தகடூர் யாத்திரை நூல்களுக்குப் பொருந்துமாயினும் நூலாசிரியர் காலத்திலேயே நடந்ததை நூலாக்கமாகச் செய்யப்பட்ட நூலுக்கு மேற்படியான தொன்மக் கருத்து எங்ஙனம் பொருந்தும் எனச் சிந்திக்க வேண்டியது தேவையாகிறது.

இக்கருத்தாடல் நுட்பத்தை, "மதி நுட்பம் நூலோடுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற்பவை" (636) என்ற குறட்பொருள் வழித் தேர்ந்து தெளியலாம்.

சிலப்பதிகாரம் முழுவதும் கதையாகவே அமையவில்லை என முதலில் உணரவேண்டும். அது ஒரு முத்தமிழ் பாவிய காவியமாகப் படைக்கப்படும் போது அது உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாய், கதையை மையப்படுத்திக் கூறிய அளவில் இக்கதைக்குப் பக்கபலமாகக் கிளைக்கதைகளும், உவமைகளும், கற்பனைகளும், தொன்மங்களும், கனவுகளும் நாட்டுப்புற நகர்ப்புற வாழ்க்கைகளுமாகப் பலப்பலவாய் இளங்கோவால் புனையப்பட்டுள்ளன.

இங்ஙனம் பரவலாகப் புனையப் பட்டத்தில் ஈண்டு "உரையொடு புணர்ந்த பழமை மேற்று தொன்மை" என்ற தொல்காப்பியக் கருத்தோடு சிலப்பதிகாரத்தைப் பொருந்திப் பார்த்தலே இக்கட்டுரைக்கான கருதுகோளாகும்.

தொன்மை என்ற ஒன்றை இலக்கிய வகைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறுகிறார். பழமை என்ற பொருள்படும் தொன்மை என்பதுதான் காலப்போக்கில் தொன்மம் என்ற இலக்கிய உத்தியாகக் கருதப்பட்டது. அதனால்தான் முழுக்க முழுக்க பழைய கதைகளாக உள்ள இராமாயணமும் பாரதமும் புராணப் பாங்கில் தொன்மை எனப்பட்டன. இவை போன்றதாகக் கந்தபுராணமும் தொன்மை எனப்படும் இலக்கிய வகையாகும். ஆனால் சிலப்பதிகாரம் முழுக்க முழுக்கத் தொன்மை எனக் கூறப்படாமல் தொன்மக் கூறடங்கிய நாடக இலக்கியக் கதை நூல் எனப்படுமாறு உணரவே நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரம் அதன் பாற்படும் என்று கூறாமல் சிலப்பதிகாரமும் அதன்பாற்படும் என்றார்.

சிலப்பதிகாரம் என்பதாக மட்டும் கூறியிருந்தால், ராமாயணம் பாரதம் போன்றவை முழுக்கத் தெய்வங்களின் தொடர்புடையன போலக் கருதப்பட்டு விடும். ஆனால் கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை, பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், பாண்டிமாதேவி, கோப்பெருந்தேவி போன்ற கதை மாந்தர்கள் வாழ்ந்ததன் உண்மைகள் சிலம்பில் பதிவாகி உள்ளதால் சிலப்பதிகாரம் புராணக்கதை அன்று என்பதற்கேற்பவே சிலப்பதிகாரமும் என்று எதிரது தழீஇய எச்சவும்மையில் கூறப்பட்டது, இதனால் சிலப்பதிகார வரலாறு - புனைந்துரை வழக்காய்ப் படைக்கப்படாமல் தொன்மமும் உண்மை வரலாறுமாகப் படைக்கப்பட்டது எனலாம்.

கோவலன், கண்ணகி, மாதவி எனும் மூவரின் பிறப்பும் தொன்மத்தோடே தொடர்புடையனவாகக் காட்டப்பட்டன. ஆனாலும் பெற்றோர்களால் மணம் பேசப்பட்டுத் திருமணம் நடந்து கண்ணகி கோவலன் இருவரின் வாழ்வு புகார் நகர் தொடங்கி, மதுரை சென்று அங்கே வாழ முடியாதவர்களாய் இருவரும் பிரிந்த நிலையில் கண்ணகி சேரநாட்டில் தெய்வமாவது வரையான கதைக்கூறுகள் நடந்தவையாயிருக்கின்றன.

இருப்பினும் இளங்கோவடிகள் கூறும் கனவுகள் மதுராபுரித் தெய்வ வெளிப்பாடுகள், கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறும் புராணப் பாங்கான அறிவுரைகள், கண்ணகி சிலைக்குப் பெருமங்கலம் செய்ததும் தேவந்திகை மேல் தெய்வம் ஏறி ஆடிய நிகழ்வுகள் போன்றவற்றுடன் அவள் தன் இடது மார்பைத் திருகி மதுரையில் உள்ளதீத்திறத்தார் பக்கமே சார எறியச் செய்தவையெல்லாம் தொன்மக் கூறுகளாகவே உள்ளன.

ஆய்ச்சியர் குரவையில் காணும் நிமித்தங்கள் எல்லாம் தொன்மத்தின் கூறுகளாகவே. உணருமாறுள்ளன. எனினும் இத்தொன்மங்கள் எல்லாம் கதை ஓட்டத்திற்குத் துணை புரிந்தாலும் மார்பைத் திருகி விட்டெறிந்தால் தீ பற்றுமா! என்ற கருத்தாடல் மட்டும் தொன்மமா? தொன்மைச் சாயலா என உறுதிப்படுத்த முடியாததாக உள்ளது.

இச்செயல் ஓர் உளவியல் பாங்கானது எனத் தெளிதல் வேண்டும் என்ற குறிப்பை இளங்கோவடிகளே நடுகல் காதையில் கூறுகிறார்.

வஞ்சின மாலையான பகுதியில் தான் ஒரு பத்தினி என்பது உண்மையானால் என வஞ்சினம் மொழிந்தே இடது மார்பைத் திருகி எறிந்தாளெனக் கூறப்பட்டாலும் அந்த செயல் இயற்கையிறந்த செயலாகவே கருதக்கூடும் என்றதால் இளங்கோவடிகள் அக்கருத்தைத் தொன்மமாகக் கூறிய அளவில் உளவியலாக்கக்கூறாக முனைந்ததால் நடுகல் காதையில் அதே செயலைக் கொதியழல் சீற்றம் கொங்கையின் விளைத்து என நனி நாகரீகமாக நம்பும்படிக் கூறினார்.

அதாவது நெஞ்சம் குமுறிப் பற்றிக்கொண்டெறிகின்ற சினத் தீயைத்தான் விட்டெறிய நினைத்துத்தம் நெஞ்சம் உள்ள இடத்தைத் தடவியபோது தட்டுப்பட்ட மார்பையே திருகி எறிந்து விட்டாள் என்பது கருத்து. இச்செயல் எளிதன்று; தன்னை இழக்கும் ஈகத்திற்கு (தியாகத்திற்கு) ஈடே இல்லை. இங்ஙனம் நெருடலான ஒரு கருத்தைத் தொன்மம்போல்சுட்டிப் பின் விலக்கி அதற்கான உண்மையை நிலைநாட்டிய திறமானது இளங்கோவின் தொன்மம் தழீஇய நாடகத் திறனுக்கும் சொல்லாடலுக்குமான இலக்கிய உத்தி எனலாம்.

தொன்மை தானே என்ற நூற்பாவின்படி உரையொடு புணர்ந்த பழமை என்பதற்கு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக மட்டும் பொருள் பார்க்காமல் அதற்கும் மேலாக இளங்கோ குறிக்கும் தொன்மம் என்பது உளவியல் ஓர் உரசலான புதுமை கலந்த தொன்மம் என உணரச் செய்த திறன் இளங்கோவடிகளையே தனித்துப் பிரித்துணரச் செய்துள்ளது எனலாம்.

மேலும் இந்த உரையோடு புணர்ந்த பழமை என்பதைக் கதைத் தொடர்ச்சியில் கண்ணகி பாண்டியனிடம் நீதி கேட்க வந்த போது அவள் அரண்மனை வாயில் காவலனிடம் பேசியதையும் அங்ஙனம் அவள் பேசியதை அக்காவலன் பாண்டியனிடம் சென்று கூறிய பாங்கினையும் ஒருசேர உணர்ந்தால் உரையொடு புணர்ந்த பழமை என்ன என்பதை உணரலாம்.

இந்தக் கருத்துக்கேற்ப ஈண்டு உரையொடு என்பதை உரையுடன் என மேற்கண்டவாறு கருதாமல் உரையிடை புணர்ந்த என்பதாகப் பொருள் கருதும்படி உள்ளது எனக் கொண்டால் தொன்மத்தின் சிறப்பு மிகுதிப்படும் எனலாம். ஏனெனில் வாயில் காவலனிடம் கண்ணகி,

"அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே" எனக் கூறிய பின் இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள் கணவனை இழந்தாள் கடையகத் தாள் என்று அறிவிப் பாயே அறிவிப் பாயே என்றாள்! இதனைக் கேட்ட வாயிலோன் அவையில் சென்று பஞ்சவ வாழி! தென்னவ வாழி! என்றெல்லாம் பாண்டியனை வாயார வாழ்த்தியதும், பாண்டியனிடம்,

அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்,
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேர் உரம் கிழித்த பெண்ணும் மல்லள்,
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழில் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே!
கணவனை இழந்தாள் கடையகத் தாளே!

எனக் கூறினான்.

கண்ணகி பற்றிய அறிமுக உரையாய்க் கூறிய வாயிலோன் கூற்றில் தொன்மமும் நடப்பியல் உண்மையும் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன.

செற்றமும் செயிர்ப்பும் (உட்பகை உணர்வும், கோபமும்) உடையவளாய் ஒற்றைச் சிலம்பொன்று ஏந்தியவளாய், கணவனை இழந்த நிலையில் ஒருபெண் வந்துள்ளாள் என்பதாக மட்டும் கூற வேண்டியவன் கண்ணகியின் ஆவேசமுற்ற தோற்றப் பொலிவால் அவளைப் பலவாறான அச்சமூட்டும் பெண் தேவதையாகக் கூறுகிறான் என்பதுதான் தொன்மத்தின் பாங்காக உள்ளது. இவை அச்சத்தின் வருணனை.

இப்பெண்ணைப் பார்த்தால் மகிடாசூரனை அடக்கிய கொற்றவை போல உள்ளாள் எனக் கூறமுடியவில்லை. ஏனெனில் அக் கொற்றவைக்கான அடையாளம் இவளிடம் காணப்படவில்லை. மாறாக அவளைப் பிடாரியோ காளியோ மற்றும் தாருகன் மார்பைக் கிழித்த

சூரணங்கோ எனக்கூறு மாறில்லை என்பதும் வாயிலோனின் கண்ணகி பற்றிய கணிப்பாக உள்ளது. கொற்றவை, பிடாரி, காளி, சூரணங்கு என நான்கும் தொன்மத்தின் பங்களிப்பாகக் கூறப்பட்டவை.

பொதுவாகத் தொன்மம் (MYTH) பற்றிய ஆய்வுகள் பலவற்றுள் அது சூழலுக்கு ஏற்ப உருவாகும் உருவக் காட்சியின் தொகுதி என்ற கருத்தும் ஒன்றாகும். அதில் ஏற்படும் தெய்வக் காட்சியான அச்சமும் ஓர் இன்றியமையாத நிலையாகும் என்பதைச் சேர்த்து உணர வேண்டும் என்பது தொன்மம் பற்றிய ஆய்வாளர் கருத்தாகும், மேலும் இங்ஙனம் உணரப்படும்போது அக்கற்பனைப் புனைவை அறிவியல் ஆய்வுக்கோ பகுத்தறிவின் பகுப்புக்கோ உட்படாது என்பதும் தொன்மத்தின் இலக்கணமாக உள்ளது. அதனால்தான் வாயிலோன் கூறிய தொன்மம் பற்றிய கண்ணகியின் அடுக்கத்தில் கவனம் செலுத்தாமல் கணவனை இழந்தவளாய் ஒற்றைச் சிலம்புடன் வந்தவளை உள்ளே வர அனுமதி தருவான் பொருட்டுப் பாண்டியன் வாயிலோனிடம் "வருக மற்றவள் தருக ஈங்கு" என ஆணை பிறப்பித்தான்.

இங்ஙனம் தொன்மத்தைப் புறந்தள்ளி வாயால் ஆணை பிறப்பித்து அச்சமற்றவனாக அரசன் இருந்தான் என்ற குறிப்பை இளங்கோ மறைமுகமாகக் கூறினார் எனலாம். ஆனாலும் கண்ணகியைக் கண்ட அச்ச உணர்வு வாயிலோனை விட்டு நீங்காததால் அவன் அரசனின் அமைதியான கட்டளையை முழுவதுமாக மனம் கொள்ளாதவன் போலவே இருந்ததை இளங்கோவடிகள் வாயிலோனின் மௌனமொழி வாசகமாக உணரப்படும் மெய்ப்பாட்டால் "வாயிலில் வந்து கோயில் காட்ட" கண்ணகி கோயில் மன்னனைச் சென்று கண்டாள் என்றார்.

இதில் கண்ணகியைப் பார்க்க அஞ்சுபவனைப் போலவே அவன் கண்ணகியிடம் வாய் திறந்து உள்ளே போவதைப் பற்றி ஏதும் கூறாமல் அச்சத்தில் உறைந்த வெளிப்பாட்டளவில், தன் இரு கைகளால் அரண்மனையின் உள்ளே செல்லச் சைகையை மட்டும் காட்டினான். இந்த சைகைதான் மெய்ப்பாடு. இதனைத்தான் இன்றைய நாளில் நாடக வகையில் மெய்யுணர்த்தும் மொழி (உடல் உணர்த்தும் அசைவு மொழி) (Body language) என்கின்றனர்.

ஈண்டுள்ளகதைப் போக்கில் வாயிலோனின் செயல் உரையொடு புணர்ந்த பழமையை இருவேறு நிலையில் உணர்த்திக் காட்டினான் எனலாம். அவன் பாண்டியனிடம் கண்ணகியைப் பற்றிக் கூறும்போது மக்கள் நிலையினின்று விஞ்சிய பெண் தேவதையாகக் கூறினாலும் அவன் அவளைத்தீண்டி வருத்தும் பெண் தேவதையாகவே தன் நெஞ்சில்வரித்துக் கொண்டு அச்சத்தினின்றும் விடுபடாத நிலையிலேயே மேலும் அவளைப் பற்றிக் கூற வாயடைத்துப் போனாள் என்பதற்கு அடையாளமாய் மெய்ப்பாடாக சைகை காட்டி அவளை அரண்மனைக்குள்ளே செல்ல அனுமதித்தான் என்ற கருத்தாடல் தான் தொல்காப்பியர் தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்று என்பதற்குப் பொருத்தமாக உள்ளதாக உணரமுடிகிறது. இதில் உரையொடு என்பதை உரையிடை என்பதாகக் கொள்ளவேண்டும்.

ஆக, இக்கட்டுரையால், சிலப்பதிகாரக் கதையானது தொன்மமாகவே அமையாமல் தொன்மக் கூறு விரவியதாக உள்ள நூல் என்பதை உணரலாம என்க!

இங்ஙனம் எல்லாம் சிந்திப்பதற்கு ஏற்ற நிலையில் தொல்காப்பிய நூற்பா அமைந்ததை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொன்மை என்றதன் வகையில் சிலப்பதிகாரமும் அடங்கும் என்பதால் சிலப்பதிகாரத்தைக் கதை தழுவிய இலக்கியமாக இலக்கணத்தின்வழி உணர்ந்து மகிழச் செய்தார் எனலாம்.

இயற்கையின்மீது மனிதன் ஆதிக்கம் - ஆக்கிரமிப்புக் காரணமாக இயற்கையின் எதிர்த்தாக்குதலைச் சந்திக்க வேண்டிய நெருக்கடிக்கு மனிதர்கள் உள்ளாகிறார்கள். பூமியின் குழந்தைகளாகிய நாம் ஒரு கட்டத்தில் பூமியை மேலாதிக்கம் செய்யும் மேலாளர்கள் ஆகிவிட்டோம். பசுமைப்புரட்சி உணவுப்பஞ்சத்தை நீக்கிவிட்டது என்று கருதினாலும், அதன் மறுபக்கத்தில் இயற்கைக்கு மாறான இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மூலம் விளையும் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்வதாய் அமைந்துவிடுகிறது. இயற்கை விவசாயம் இன்றைய காலத்தின் அவசியத் தேவையாகும்.

– தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விருக அருள் மழை தருக!

(பொன்னம்பலக் கவிராயர்)

எரிகணைகள் கணந்தோறும் எய்யும் வெய்யோன்
எழில்நிழலைச் சூனியமாய் ஆக்கித் தீய்க்க
விரிவானில் கருமேகக் கூட்டம் எல்லாம்
வெந்தணலில் இடுபஞ்சாய்த் தீய்ந்துபோகப்
பொறிகலங்கி விலங்கினங்கள் கானல்நீரே
கதியென்று நிலைகுலைந்து அலைந்து வீழ
வெறிமிகுந்து கரைமோதி தம்மைத் தாமே
வீழ்த்திக் கொண்டலைகின்ற கடலாய் ஆனேன்;

நெறிகடந்த மனிதர்களால் குறிஞ்சி யோடு
நிலைகுலைந்த முல்லை உடன் மருதம் நெய்தல்;
சரிசெய்ய வழியின்றி ஏழை மக்கள்
சரிந்தழிந்து மதுவுக்குள் வீழும் வண்டாய்க்
குறிதவறிச் சிதைகின்றார் மாற்றம் செய்யக்
குருகுகனே அடிகள் தமிழ் கேட்கும்ஐய,
பொறிபடரும் மயிலேறி வருக, எங்கள்
புவியெங்கும் அருள்மழையாய் விரைக தேவே!

எதுகடமை எதுவுரிமை இங்கே? வாழ்வில்
எவர்க்குண்டு மனசாட்சி ஈரமில்லாச்
சதிகொண்ட சழக்கர்களால் நாளும் நாளும்
சலிப்பேறித் துருப்பிடித்து இதயம் நைந்து
விதிதந்த வழிஎதுவோ, அதுவே வாழ்க்கை
விதியென்ற ஏழையர்க்கு விதியைத் தானே
மதிகொண்டு சமைப்பதுவாய் மனப்பா லுண்டு
மதிகெட்டோர் தலைதூக்கித் திரியும் கெட்ட

கலிகொண்ட காலத்தில் கந்த வேளே
காத்திருக்க வைத்திடுதல் முறையோ, ஐயா?
கிலிகொண்ட மனதோடு எனக்குள் மூண்டு
கிளர்ந்தெழுந்த தமிழ்கொண்டு கிறுக்கிவைத்த
படிகொண்டு பாடுகிறேன், குமரவேளே
பதந்தந்து உலகுய்யக் குன்றை நாட்டின்
அடிகள்அருள் தமிழ்உண்டு வாழும் ஐய
அபயம், உடன் துயர்தீர்க்க வருக தேவே!

— —

மூன்றும் நிறைந்த எழுத்தாளர் அய்க்கண்

(18.05.2019 ஆம் நாள் குன்றக்குடி ஆதீனத் திருமடத்தில் நிகழ்ந்த விசாக விழாவின்போது நற்கதை நம்பி பேராசிரியர் அய்க்கண் அவர்களுக்கு திருமடத்தின் சார்பாக "எழுத்துவேந்தர்" என்று விருது வழங்கி, குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆற்றிய வாழ்த்துப் பேருரையின் சுருக்கக் கட்டுரையாக்கம்)

"எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்று நாம் ஆன்மிகத்தளத்தில் முழங்கி மகிழ்வதுபோல, இன்று இலக்கியத் தளத்தில் நாம், "எல்லாப் புகழும் நம் அய்க்கண் அவர்களுக்கே" என முழங்கி, அறிவித்து மகிழ்கிறோம். இந்தப் பாராட்டும் மகிழ்ச்சியும் அய்க்கண் அவர்களுக்கு நமது திருமடம் இரண்டாவது முறையாகச் செய்வதாகும். நமது 45ஆவது குருமகாசந்நிதானம் திருமடத்தில் வீற்றிருந்த காலத்தில், நமது அய்க்கண் அவர்களுக்கு "நற்கதை நம்பி" என்று பட்டம் அளித்து, அறிவித்துச் சிறப்புச் செய்திருக்கிறது. "எழுத்துவேந்தர்" என்ற இன்றைய பட்டமளிப்பு விழா. அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பமை ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெறுவதும் ஒரு நல்ல பொருத்தமாகவே அமைகிறது! (பலத்த கைதட்டல்)

தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றிப் பல்வேறு அமைப்புகளிலும் பங்கேற்றுச் சிறப்புச் செய்து வரும் நமது அய்க்கண் அவர்கள், மிகச்சிறந்த எழுத்தாளர் மட்டுமல்லர், மிகச்சிறந்த வாசிப்பாளர், நூல்களின் நேசிப்பாளர், மிகச்சிறந்த வாசிப்பாளர்களே மிகச்சிறந்த படைப்பாளர்களாக, மிகச்சிறந்த போராளிகளாக, மிகச்சிறந்த சாதனையாளர்களாக உருவாக முடியும். நம்முடைய காந்தியடிகள், அறிஞர் அண்ணா, முன்னாள் குடியரசுத் தலைவர் கலாம் போன்ற பெருமக்கள் சிந்தனையாளர்களாக, களப் போராளிகளாக நின்று வெற்றிபெற்றதற்குக் காரணம் அவர்கள் வாசிப்பாளர்களாக, புத்தக நேசிப்பாளர்களாக இருந்ததே ஆகும். ஜான்ரஸ்கின் எழுதிய "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற நூலும், டேவிட் தோரோ எழுதிய "ஒத்துழையாமை" என்ற நூலும், அறிஞர் டால்ஸ்டாய் எழுதிய "அன்பின் வலிமை" என்ற நூலும் வள்ளுவர் படைத்த திருக்குறளும்தானே அண்ணல் காந்தியடிகளின் எழுச்சிக்குக் காரணம்ஆயின! தென் ஆப்பிரிக்கப் போராட்டத்தின்போது தமிழ்மக்கள் வள்ளியம்மை காட்டிய

வீரமும் தீரமும்தானே காந்தியடிகளின் உள்ளத்தில் எழுச்சியையும் கிளர்ச்சியையும் எழுப்பிவிட்டன.... நமது அய்க்கண் அவர்கள் படைத்த அழகப்பர் வாழ்க்கை வரலாற்று நூலும், பல்வேறு சிரமங்களுக்கு இடையில் அவர் நடத்திவரும் "காரைக்குடி புத்தகக் காட்சி" நிகழ்வுகளும், சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் சங்க மாநாடுகளும், மாநாட்டின் முக்கிய அம்சமாக அவர் நடத்திவரும் மாணவர்களுக்கான இலக்கியப் போட்டிகளும் நமது அய்க்கண் அவர்களுடைய புத்தக வாசிப்புக்கும் நேசிப்புக்கும் மிகச்சிறந்த அடையாளங்கள் ஆகும். மிகச்சிறந்த சிறுகதைப் படைப்பாளரான அய்க்கண் அவர்கள், அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியார் நினைவாகப் பல ஆண்டுகளாக "சிறுகதைப் போட்டி" நடத்திப் பரிசுகள் வழங்கிவரும் மிக முக்கியமான இலக்கிய வரலாற்று நிகழ்ச்சியையும் நாம் இங்கு நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம். இவை அனைத்தையும் நினைவுகூர்ந்துதான் தமிழக அரசு "அய்க்கண்" அவர்களுக்கு அரசு சார்பிலான "அண்ணா விருது" வழங்கியது. நாமும் நமது திருமடத்தின் சார்பில் இன்று "எழுத்துவேந்தர்" என்ற விருதினையும் வழங்குகின்றோம்.

சுருக்கமாகச் சொல்வதானால் நமது "அய்க்கண்" அவர்களது மிக விரிந்த பல்துறைப் படைப்பாக்கங்களிலும், இலக்கியப் பங்களிப்புகளிலும், "மானுடம்" இருக்கிறது. "ஈரம்" இருக்கிறது; உலகத்தை வென்றெடுக்க வல்ல "கனிவு என்ற கசிவு" இருக்கிறது. நமது இளைய தலைமுறையினர் "அய்க்கண்" அவர்களை முன்னோடியாகக் கொண்டு அவர்களுடைய படைப்புக்களை நேசிப்புடன் வாசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். மிகக் குறிப்பாக, பல்வேறு புதிய புதிய வரலாற்றுச் செய்திகளோடு, ஆராய்ந்து அய்க்கண் எழுதிய வள்ளல் அழகப்பர் குறித்த வாழ்க்கை வரலாற்று நூலை இளைஞர்கள் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழகம் தழுவிய, உலகத்தின் கல்வித் துறை தழுவிய பல்வேறு பரிசுகள், பாராட்டுகள், கவன ஈர்ப்புக்கள் அனைத்தும் ஒருசேரப் பெற்றுப் புகழின் உச்சியில் நிற்கிற நமது "அய்க்கண்" அவர்களுக்கு இந்திய அரசு சார்ந்த "சாகித்திய அகாதெமி" பரிசுமட்டுமே வந்து சேரவேண்டும் என்று உணர்கிறோம். மிக உயரிய இலக்கிய விருதாகிய அகாதெமி விருதும் நம் அய்க்கண் அவர்கள் பெறுவார்கள் என்று நமது திருமடத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்! வாழ்க, வளர்க, நமது "எழுத்து வேந்தர்"!

கட்டுரையாக்கம் : உபாலி, தேவகோட்டை

காவிரிக்கு வேண்டும் களம்!

(கவிச்சுடர். அழகுதாசன்)

- யாதுமே ஊரென்று யாவருமே கேளிரென்று
சூதுமே வாதுமே செய்யாதீர் - போதுமான
காவிரிநீர் கேட்டின்று கண்டனத்தை நாம் சொல்லக்
காவிரிக்கு வேண்டும் களம்!

- ஏமாந்து விட்டோம் எதிராளி கன்னடத்தார்
தாமாகத் தண்ணீர் தருவரோ - தாமதமேன்
கூவி அழைத்துக் குரல்கொடுப்போம் ஒற்றுமையாய்க்
காவிரிக்கு வேண்டும் களம்!

- காந்தியம் பேசிக் கதரை அணிகின்றோம்
பாந்தமின்றி நீரால் பகையானோம் - மாந்தரினம்
ஓவியம்போல் ஒப்புரவாய் ஒற்றுமையாய் நாம்வாழக்
காவிரிக்கு வேண்டும் களம்!

- சோழர்கள் காலமுதல் சொந்தமாய் வந்தது
தோழமையாய் நீர்தான் சுரந்தது - வாழவே
கூவி அழைத்துமே கூட்டத்தைக் கூட்டவே
காவிரிக்கு வேண்டும் களம்!

- நீதியென்றும் தர்மமென்றும் நீதிநூல் கற்கின்றோம்
ஓதியுமே ஊரில் உணர்த்துகின்றோம் - சாதிப்போம்
பூவிரிக்கும் காவிரித்தாய் பூவுலகில் வாழ்ந்திடவே
காவிரிக்கு வேண்டும் களம்!

- சுயநலம்ஏன் நீர்வளத்தில் சொந்தமும் உண்டு
பயமுறுத்தல் தேர்தல் பகைமை - பயனின்றிக்
காவிரிநீர் வேண்டியே கைகோர்த்து நிற்பதற்குக்
காவிரிக்கு வேண்டும் களம்!

- தேசமே நம்சொத்து தண்ணீர் திருவன்றோ
நாசத்தைப் பண்ணுகிற நஞ்சுமொழி - நேசமின்றிக்
கோவிலென்று கும்பிடுவார் குக்கலெனக் கொக்கரிப்பர்
காவிரிக்கு வேண்டும் களம்!



நூல் அறிமுகம் - திறனாய்வு

திருக்குறள் உரைமலர்கள்

உலகத் திருக்குறள் பேரவையின் மதுரைக் கிளை சார்ப்பாக, 17.08.2019 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் நியூ காலேஜ் ஹவுஸ், திருவள்ளுவர் அரங்கில், திருக்குறள் உரைமலர்கள் நூல் அறிமுகம் மற்றும் திறனாய்வு குறித்த கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மதுரை, உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் கவிஞர் திரு. கா. கருப்பையா அவர்கள் தலைமை வகித்தார். திருமதி. அபிராமி கார்த்திகேயன் முன்னிலையில் நிகழ்வு நடைபெற்றது.

மதுரை செந்தமிழ்க் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர். ரேவதி சுப்புலெட்சுமி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். உலகத் திருக்குறள் பேரவையின் மகளிர் அணித் தலைவர் முனைவர்.யாழ்.சு.சந்திரா அவர்கள் நூல் அறிமுகம் தர, மதுரை காந்திய சிந்தனைக் கல்லூரியின் மதிப்புறு முதல்வர் முனைவர். சு. முத்துஇலக்குமி அவர்கள் நூல் ஆய்வுரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் நியூ காலேஜ் ஹவுஸின் தலைவர் திருமதி. கமலாதேவி மணிமொழியன், நியூ காலேஜ் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர் திரு. கார்த்திகேயன் மணிமொழியன், மதுை காந்தி மியூசியம், யோகா துணைப்பேராசிரியர் முனைவர் சாப்ரா பீவி அல்லமின் ஆகியோரும், கட்டுரை வழங்கிய பேராசிரியர்கள், மாணவியரும் குடும்பசகிதம் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை மதுரை உலகத் திருக்குறள் பேரவையின் செயலாளர் திரு. கவிபாரதி அசோக்ராஜ் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் குருமுதல்வர்

திருவருள்திரு தெய்வசிகாமணி பரமாசாரிய சுவாமிகளின்

694ஆம் ஆண்டு

குருபூசைவிழா

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் குருமுதல்வர் திருவருள்திரு. தெய்வசிகாமணி பரமாசாரிய சுவாமிகளின் 694ஆம் ஆண்டு மகாகுருபூசைவிழா 14.9.2019 சனிக்கிழமை பூரட்டாதி நட்சத்திரத்திருநாளன்று திருவண்ணாமலையிலுள்ள குருமுதல்வர் குருமூர்த்தத்தில் திருவருள்திரு 46ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளிச் சிறப்பு வழிபாடு செய்துகொண்டார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு முன் அன்று காலையில் அருள்தரு அண்ணாமலையார் திருக்கோயில் கிழக்குக் கோபுர வாசலிலிருந்து குருமுதல்வர் திருவுருவப்படத்தை எழுந்தருளச் செய்து 46ஆவது குருமகாசந்நிதானம் அவர்களுடன் அன்பர்கள் புடைசூழ, திருமுறைப் பாடல்கள் வழிநெடுகிலும் பாடப்பெற்று ஊர்வலமாய் வேட்டவலம் சாலையின் தென்பக்கம் எழுந்தருளியிருக்கும் குருமுதல்வரின் குருமூர்த்தத்தை அடைந்தது. அதன்பிறகு சிறப்பு வழிபாடு செய்து முதல்நாள் விழா நிறைவெய்தியது.

15.9.2019 இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருவருள்திரு 46ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் குன்றக்குடியிலுள்ள குருமூர்த்த வழிபாடு, அருள்தரு காளத்திநாதர் சிறப்பு வழிபாடு, அருள்தரு சண்முகநாதப் பெருமான் வழிபாடு ஆகியவற்றை முறையே செய்து அன்பர்களுக்குத் திருநீற்றுப் பிரசாதம் வழங்கி வாழ்த்தியருளினார்கள்.

அதன்பின் காலை 10 மணி அளவில் சமய விழா - நூல் வெளியீட்டு விழா திரு. அரு. மாசிலாமணி ஓதுவார் ஆதிகுருமுதல்வர் துதிப்பாடலுடன், குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் தொடங்கியது. முனைவர் கிருங்கை சேதுபதி அவர்கள் எழுதிய "தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வரலாறு படைத்த வரலாறு" என்ற நூலை நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர்.கா. பிச்சுமணி அவர்கள் வெளியிட்டு அரியதோர் உரை நிகழ்த்தினார். திரு. அ. திருநாவுக்கரசு அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டார். முனைவர் மு. பழனியப்பன் அவர்கள் நூல்

திறனாய்வுரையாற்றினார். அடுத்து முனைவர்.சபா. அருணாசலம் அவர்கள் "அப்பூதியடிகள் நாயனார்" என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியுடன் காலை நிகழ்ச்சி நிறைவெய்தியது.

பிற்பகல் 2.30 மணியளவில் குழிபிறை ஓதுவார் திருமுறைகலாநிதி திரு.எஸ். அருணாசல தேசிகர் குழுவினரின் திருமுறை இசையரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

மாலை 4.00 மணியளவில் பாராட்டுவிழா. திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமை வகித்து ஈரோடு திரு.அ.திருநாவுக்கரசு அவர்களுக்கு "அருள்நெறிச் செல்வர்" என்னும் பட்டம் வழங்கி, கேடயம் தந்து பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கினார்கள். அருள்திரு. கோவிந்தானந்த சுவாமிகள் அவர்கள், விஞ்ஞானி.டாக்டர். கே. பாலகிருஷ்ணன் அவர்கள் இருவரும் பாராட்டுரை வழங்கினார்கள். திரு.அ. திருநாவுக்கரசு அவர்கள் ஏற்புரையாற்றினார். திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் பாராட்டுரையும், ஆசியுரையும் வழங்கினார்கள். நன்றியுரைக்குப் பின் மங்கல வாழ்த்துடன் விழா நிறைவெய்தியது. இந்நிகழ்ச்சிகளின் இணைப்புரை வழங்கினார் முனைவர். திரு. கிருங்கை சேதுபதி அவர்கள்.

இரவு 7.00 மணியளவில் திருவருள்திரு குருமகசந்நதானம் அவர்ள கொலுவீற்றிருந்து அன்பர்களுக்கு அருளாசி வழங்கியருளினார்கள். நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவேறின.

தமிழ்நாட்டில் தமிழ்ச் சமய நெறியை அரியணையில் அமர்த்த வேண்டும். திருக்கோயில்களில் தெய்வத்தமிழில் வழிபாடுகள் இயற்ற வேண்டும். தமிழர்கள் இடையில் வந்த சாதிகளுக்கு முழுக்குப் போட்டுவிட்டு ஒருகுலமாக வேண்டும்; மீண்டும் திருக்கோயில்களைச் சமுதாய மையங்களாக ஆக்கவேண்டும். திருக்கோயில் சார்ந்தே நமது மொழி, சமயம், கலை, நாகரிகம், சமுதாயம் ஆகியன வளரவேண்டும். திருக்கோயில்கள் அரசின் ஆதிக்கத்திலிருந்து மீட்கப்பட்டு அந்தந்த ஊர்மக்கள் சொத்தாக அமைந்து, மக்களால் மக்களுக்காக நிர்வாகம் செய்யப்பெறுதல் வேண்டும்.

– அருள்நெறித்தந்தை

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதங்கள்......

மக்கள் சிந்தனையின் ஏப்ரல் - மே மாத இதழ் கிடைக்கப் பெற்றேன். அளவிலா உவகையுற்றேன். இந்த இதழ் செட்டிநாட்டு வரலாற்று இதழாக அமைந்திருப்பது மிக்க மகிழ்ச்சி தருகிறது.

நம் குருமகா சந்நிதானம் அவர்கள் படைத்துள்ள செட்டிநாடு தமிழ்ப் பண்பாட்டின் தனிவீடு என்ற படைப்பு, செட்டிநாட்டுக் கருவூலமாகும். வழிபாட்டிற்குரிய நம் சுவாமிகள் செட்டிநாட்டு வரலாற்றை நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்கள்.

குறிப்பிடத்தக்க அண்ணாமலை அரசரையும், கம்பன் அடிப்பொடியையும், வள்ளல் அழகப்பரையும் பற்றிய பல தரவுகளைச் சுவாமிகள் தந்திருப்பது நினைந்து நினைந்து இன்புறத் தக்கதாகும். பல அரிய செய்திகள் அவர்களின் படைப்பில் இடம் பெற்றிருப்பது படித்து நினைவில் கொள்ளத் தக்கனவாகும்.

வழக்கம்போல் ஞானத்தந்தையின் திருவாசகக் கட்டுரையும், தமிழாகரர் தெ. முருகசாமியின் கட்டுரையும் சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளன.

எம்முடைய எண்ணத்தில் சேகரித்து வைக்கக்கூடிய கட்டுரையாக ஞானாமிர்தம் பற்றிய ஔவை. துரைசாமிப்பிள்ளை அவர்களின் கட்டுரை அமைந்துள்ளது.

இந்த இதழ் நிறைவான இதழாக அமைந்துள்ளமைக்குக் குருவருளுக்கும் திருவருளுக்கும் நன்றிதனைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.

- முனைவர்.பழ. முத்தப்பன், திருச்சிராப்பள்ளி

பேராசிரியர் திரு. "அய்க்கண்" அவர்களுக்கு எழுத்து வேந்தர் பட்டமளித்துத் திருமடம் சிறப்பிக்கிறது. அய்க்கண் அவர்கள் மேலும் மேலும் சிறப்புகளும் சாதனைகளும் செய்யட்டும். அவர்கள் படைப்புகள் மேலும் மேலும் உயரட்டும்.

- பொன்னீலன் ஈத்தாமொழி.

12.06.2019 தேதியிட்ட ஆனந்தவிகடனில் வெளிவந்த "அன்பே தவம்" கட்டுரையைப் படிக்க முடியவில்லை. கண்ணீர் கலக்கத்தில் எழுத்துக்கள் கலங்களாகவே தெரிந்தன.

கல்லுக்குள் ஈரம் என்பார்கள், அதுபோலச் சந்நிதானத்திற்கு ஏற்பட்ட இடரைக் கவனியுங்கள், நான் இறங்கிக் கொள்கிறேன் என்று ஓர் தாய்மையுற்ற உள்ளம் கூறியது என்றால் இதுதான் குருவுக்கான பூசை.

வெறும் சடங்குகள் பூசை இல்லை. உள்ளம் பெருங்கோயில் என்பதை உறுதிப்படுத்த அந்தக் கர்ப்பிணியே கடவுள் வடிவில் வந்து கூறிய திருவாசகம்,

அடுக்கடுக்கான ஒவ்வொரு தகவலும் சமயம் என்றால் என்ன என்பதைக் குன்றக்குடித் திருமடம் குவலயத்திற்குக் காட்டிய போதனை எனலாம்.

மண்டைக்காட்டுக் கலவரத்தைச் சந்தித்த தமிழ்மாமுனிவரின் துணிச்சலான தொண்டுக்கு நோபல் பரிசே தந்திருக்க வேண்டும். இதைப் பரிந்துரைப்பர் இல்லாத குறையைப் போலவே தவத்திரு அருளாட்சி செய்யும் மகாசந்நிதானம் அவர்களின் (பொன்னம்பலர்) தொண்டைப் பரிந்துரைக்க யாரும் இல்லையாயினும் ஆனந்தவிகடனின் கட்டுரை ஓர் அசைவை உண்டாக்கும் என நம்புகிறேன்.

இந்தக் கட்டுரைத் தொடரில் மனிதநேயம், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, மற்றும் ஆன்மீகம் அல்லது சமயம் என்றால் என்ன என்பதன் தெளிவு போன்றவைகளைக் குன்றக்குடி குவலயத்திற்குக் கற்பிப்பதாகவே கருதுகிறேன்.

ஒவ்வொரு சமயத்திற்கும் சடங்குகள் உண்டு. அவற்றிற்கெல்லாம் மேலே மகுடமாகத் திகழ்வதுதான் மாந்தநேயம். அதைச் சரியான வகையில் தொடரோட்டம்போல் செய்துவருவது குன்றக்குடி மடம் என்பதை விளம்பரப்படுத்தும் ஆனந்தவிகடனின் தொண்டு பாராட்டுக்குரியது.

வாழிய அன்பே தவமென வாயார
ஊழி உலவாத ஆனந்தம் - சூழிய
நல்விகடன் கட்டுரையைப் போற்றிப் புகழவே
வெல்லுமோ நோபல் பரிசு!

– தமிழாகரர்.தெ.முருகசாமி

செட்டிநாட்டின் பெருமைகளை வட்டியும், முதலுமாய் வழங்கியுள்ள தவத்திரு அடிகளாருக்கு, சிரம் தாழ்ந்த வணக்கம் உரித்தாகுக.

தாலாட்டில் தொடங்கி, தம்பி துணைவேணுமென்ற, அவன் அழுகையை நாசுக்காகச் சொல்லிய "அழகே அழகு"

தமிழிசைக்கு பாடுபட்ட அண்ணாமலை அரசர், கம்பன் அடிப்பொடி.சா. கணேசனார் பற்றிய வீரம், தீரம், ஈரம், கம்பரின் குதிரைச் சவுக்கு அவரிடம் இருந்ததால், சட்டையைப் பற்றிய கவலை அவரிடம் இல்லை.

நேரம் தவறாமை, அதிலும்
காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக்கு கூழுமில்லை
வீணில் உழைத்தோமடா தோழா

என்று கவலையுற்ற தோழர் ஜீவாவுக்கு விதிவிலக்கு.

இரண்டு கோடுகளை இரட்டைத் தண்டவாளமாக்கி அதில் இரயிலும் விட்ட உ.வே.சா. இரயிலும் குயிலைப் போல் கூவுகிறது. அப்பா பிள்ளை செய்த காலத்தினால் செய்த பேருதவி, "அப்பப்பா!" முதலைப்பட்டி பற்றி படிக்கும்போது முதலையின்வாயில் சிக்கிய யானையின் கால்கள் விடுபடமுடியாது, "ஆதிமூலமே" என்ற அலறல் சத்தம், விரைந்து வந்து யானைக்கு அருள்பாலித்த, ஆபத்பாந்தவன் அநாதை இரட்சகன் போன்றவர்தான், தமிழுக்கு தொண்டு செய்து பழுத்தபழம் அய்யா உ.வே.சா.

அரிது, அரிது மானிடராய்ப் பிறப்பது என்றாள் ஔவை. அதனினும் அரிது அழகப்பராய்ப் பிறப்பது. கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த, "சமதர்ம முதலாளியாய் வலம் வந்தது" இந்தப் பூமியிலா? வியப்பாக உள்ளது.

சித்திரை இதழ் முத்திரை பதித்து உள்ளது. அட்டைப்படத்தை கண்களில் ஒற்றலாம்.

– பா. செல்வராமன், தூத்துக்குடி.

அன்பே தவம் என்ற பலரும் படிக்கும் விகடனில் வழங்கும் தொடர் எழுத்து ஓவியம், தொடர்ந்து படித்து வியக்கின்றேன். தவம் என்பது "இதுதான்" என்று அடையாளங்காட்டும் உலகியல் எடுத்துக்காட்டுகளில், அவ்வப்போது நாயன்மார்களை ஒப்பிட்டுக் காட்டும் திறன் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருக்கும், திறன் எழுத்துவலை வேட்டுவரின் உள்ளார்ந்த குறிக்கோள் பலர்க்கும் அறிந்து கொள்ளும் உபதேசமாகும்.

சிலரே படிக்கும் மக்கள் சிந்தனையில் மலர் 33-ல் "செட்டிநாடு தமிழ்ப் பண்பாட்டின் தனிவீடு" என்ற தலையங்கம் அரிய

ஆய்வு முடிவுகள் என்பேன். "சைவமும் தமிழும் வளர்த்த பக்தித் தமிழின் உறைவிடம்" என்ற அடையாளங்காட்டியது அடியேற்கும் மிகவும் மகிழ்வு. – தா. குருசாமிதேசிகர், மதுரை

கடந்த நூற்றாண்டில், நம் மண்ணின் வேந்தர் பாஸ்கர சேதுபதியால் அமெரிக்காவுக்கு அனுப்பப்பெற்ற விவேகானந்தர், முத்தமிழ்க் கூடலின் மடியில் மோனத்திலிருந்தபோது, அவரது சிந்தனையில் அலைமோதிய கணியன் பூங்குன்றனின் "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற கருத்தின் தாக்கம், சிகாகோவில் "அன்பார்ந்த அமெரிக்க சகோதரர்களே! சகோதரிகளே!" என்ற உலகநேயக் குரலாக எழுந்து, அனைத்து மத அறிஞர்களின் உள்ளங்களில் பதிந்தது. "எல்லா ஆறுகளும் கடலைச் சென்று அடைவது போல, எல்லா மதங்களும் இறைவனையே சென்றடைகின்றன என்று கருதும் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன்; பிற நாடுகளில் ஏற்படும் மதமாச்சர்யங்களால் விரட்டப்படும் மதத்தினர்க்கும் புகலிடம் கொடுத்து வாழவைக்கும் நாட்டிலிருந்து வந்திருக்கிறேன்" என்று முழங்கி உலகப் புகழ்பெற்றார் அந்த வங்க மண்ணின் மைந்தர்.

இன்று – தமிழ் மண்ணின் பெம்மான், "அன்பே தவம்" என்னும் சைவநெறியை, மற்ற அனைத்து மதஞானிகளின் கருத்துகளோடு இணைத்துப் போற்றி வாழ்க்கை நெறி காட்டும் பெற்றியைப் போற்றி, அமெரிக்கா "மாட்சிமை விருது" வழங்கிச் சிறப்படைந்திருக்கிறது. "தென்னாடுடைய சிவனே போற்றி" என்பதைத் தொடர்ந்து, "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்னும் அடியிலே, உலகத்தில் எல்லா நாடுகளிலும் உள்ள மதங்களுக்கெல்லாம் வெவ்வேறு பெயர்களில் இறைவனாக இருப்பதும் அவனே! என்ற உயரிய தத்துவத்தை உலகத்தவர்க்கு உணர்விக்கும் அடிகளார்பெருமானை, இன்று "மாட்சிமை விருது" தேடிவந்து மாட்சிமை பெற்றிருக்கிறது எனலாம். – பேராசிரியர்.டாக்டர்.அய்க்கண்



மக்கள் சிந்தனை வாசகர்களுக்கு
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!

செஞ்சி வட்டம் நயம்பாடி உலகத் திருக்குறள் பேரவை கிளையின் ஐம்பெரும்விழா

செஞ்சி வட்டம் நயம்பாடியில் உலகத் திருக்குறள் பேரவை சார்பில் 23.06.19இல் பேரவைத் தலைவர் முனைவர்.நயம்பு. அறிவுடைநம்பி தலைமையில் ஐம்பெரும் விழா நடைபெற்றது. வி.ஜி.பி. உலகத் தமிழ்ச்சங்க நிறுவனர், கலைமாமணி வி.ஜி.சந்தோசம் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார். திருவள்ளுவர் படத்தை தமிழவேள் சிவாலயம் ஜெ.மோகன் திறந்துவைத்தார். பேராசிரியர் சாமி. தியாகராசன், சேவாலயா முரளிதரன், குறள்ஞானி கு. மோகனராசு, திரைப்பட இயக்குநர் வெ. சேகர் முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழறிஞர் சிலருக்கு திருக்குறள் விருதுகள் வழங்கப்பட்டன. தமிழகம் முழுவதும் இருந்து 70க்கும் மேற்பட்ட சான்றோர் கலந்துகொண்டனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு விழாவைக் கண்டுகளித்தனர். திருக்குறள் ஊர்வலம், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. செயலர் புலவர்.பாபு, பொருளாளர் பு. புருஷோத்தமன் மற்றும் பலர் விழா சிறக்கப் பணிபுரிந்தனர்.

மருது சகோதரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் சரண் அடையாவிட்டால் காளையார்கோயில் பெரிய கோபுரம் தகர்க்கப்படும் என்று வெள்ளை ஏகாதிபத்தியம் அறிவித்தவுடன் ஆட்சி, அதிகாரத்தை இழந்ததற்குக் கவலைப்படாதவர்களும் தங்கள் உயிரைப் பற்றியும் கவலைப்படாதவர்களுமாகிய மருது சகோதரர்கள் தங்களைத் தந்து காளையார்கோயில் கோபுரத்தைக் காப்பாற்றினார்கள். இன்றும் கண்ணில் நிழலாடும் காளையார்கோயில் ராஜகோபுரம் மருதுகாத்த கோபுரமாகக் கண்ணில் நீர் நிறைக்க மருது சகோதரர்களை நினைவூட்டுகின்றது. இத்தியாகத்தின் தொடர்ச்சி ஒன்றா? இரண்டா? ஏராளம். ஏராளம்.

– தவத்திரு பொன்னம்பல அடிகளார்

சீசரின் அடக்கப் பண்பு!


(கவிவேந்தர். கா. வேழவேந்தன்)

பேரரசன் ரோம் மண்ணின் சீசர் அன்று
    பிறந்தநாள் முப்பதினைக் கண்ட போது,
நேரில்லாச் சீர்வீரன் வெற்றிக் காக
    நெடியவிழா எடுத்தார்கள் நாட்டு மக்கள்!
ஊரெல்லாம், வீதியெலாம் மதுவ ருந்தி
    உயர்ந்தவகை உணவுண்டு களித்தி ருந்தார்!
பார்போற்றப் பிறந்தமகன் சீசர் மட்டும்
    பதற்றமின்றி விண்வெளியைப் பார்த்திருந்தான்!

"ஏன் மன்னா! நாடெல்லாம் மகிழ்ச்சி வெள்ள
    இன்பத்தில் திளைத்திருக்க, நீங்கள் மட்டும்
வான் முகட்டை அளக்கின்றீர்?" என்று கேட்டு
    மதியமைச்சர் அங்குவந்தார்; மேலும் சொன்னார்;
"ஏன் அரசே! தங்களைப்போல் தொடர்ந்து வெற்றி
    எவர்கண்டார் புவிமீதில்? சீறிப் பாயும்
கான்சிங்கம் போல்தாங்கள் அடியை வைத்தால்
    காலடியில் வீழ்ந்ததன்றோ தேச மெல்லாம்!"

"இருக்கட்டும் நம்வெற்றிக் காதை! அன்று
    ஈடில்லா அலெக்சாண்டர் முப்ப துக்குள்
பெரும்வெற்றி கண்டதைநீர் மறந்தேன் போனீர்?
    பீடுமிகு கோளத்தின் பாதி நாட்டை
உருப்படியாய் அவர்வென்றார் என்றால், இந்த
    உதவாத கொண்டாட்டம் நமக்கெ தற்கு?"
தருக்கின்றி ஜூலியஸ் சீசர் சொன்ன
    சரிப் பதிலைக் கேட்டமைச்சர் மலைத்துப் போனார்!

பிரான்மலை (பறம்புமலை – திருக்கொடுங்குன்றம்) திருக்கோயில்
திருக்குட நன்னீராட்டு விழா



திருக்கயிலாய பரம்பரை குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் அருளாட்சியில் உள்ள பிரான்மலை வகை ஐந்துகோயில் தேவஸ்தானம் – பிரான்மலை (பறம்புமலை– திருக்கொடுங்குன்றம்) திருஞானசம்பந்த சுவாமிகளின் பாடல்பெற்ற திருத்தலம். அங்கு எழுந்தருளியுள்ள அருள்தரு மங்கைபாகநாதசுவாமி, அருள்தரு திருக்கொடுங்குன்றநாதசுவாமி, அருள்தரு வடுக பைரவ சுவாமி திருக்கோயில்கள் மிகச் சிறப்பாகத் திருப்பணி செய்யப்பட்டு திருக்குடநன்னீராட்டுப் பெருவிழா நிகழும் விகாரி ஆண்டு ஆவணித் திங்கள் 26ஆம் நாள் (12.9.2019) வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் 46ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருமுன்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமயம் தமிழகத் திருமடங்களின் தலைவர்கள், நீதியரசர்கள், அரசுத்துறை உயர் அதிகாரிகள், அறநிலையத்துறை அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்கள், மெய்யன்பர்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் தரிசனம் செய்து திருவருள்பேறு பெற்றனர். திருக்குட நன்னீராட்டுவிழா இனிதே நிறைவெய்தியது.

சிகரம் தொடுவாய்! பெண்ணே!

(கவிஞர். பரணி, மும்பை)

பூவாய் இருக்கும் பெண்கள்
புயலாய் மாறக் காரணம்
பெண்ணை
பூவாய் எண்ணாமல்
கற்பழித்து
காய்ந்த இலையாய் தீயில் எரிப்பதனால்
அதனால் நீ
சுனாமியைப்போல் பொங்கிவிடு
உலகம் உன்னைக் கண்டு அலறும்!
நீ
நிலவாய் குளிர்ந்தால்
குப்பையும் குளிர்காயும்
சூரியனாய் சுட்டெரித்தால்
சூறாவளியும் வெளிவரத் தயங்கும்!
பெண்ணே நீ!
ஆடைகளில் மட்டும்
நாகரிகம் காட்டாமல்
அறிவியலில் புதுமைகண்டு
புத்துலகம் படைக்க
புறப்படு இன்றே!
பெண்ணே!
எங்கே தேடுகிறாய்
உனது வெற்றியை
அது உனக்குள் மட்டும் உள்ளது
துணிந்து தோண்டி எடு
சிகரம் தொடுவாய் உம் முயற்சியால் பெண்ணே!
தீக்குச்சியைப் பற்றவை
தீக்குளிக்க அல்ல
தீபத்தை ஏற்ற!

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தநாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406



தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள்
அமெரிக்கா சாஸ்தா அறக்கட்டளையின் விழாவில் சொற்பொழிவாற்றுதல்.
நாள் : 02-06-2019



அமெரிக்கா - அட்லாண்டாவில்
தமிழ்நாடு அறக்கட்டளை விழா பட்டிமன்றத்தில் தலைமை உரை
நாள்: 26-05-2019

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-June-Oct 2019

Price Rs. 8-00
Date of Publication 30-10-2019



ழாவில் ஈரோடு திரு. அ. திருநாவுக்கரசு அவர்களுக்கு, குருமகாசந்நிதானம் அவர்கள்
“அருள்நெறிச் செல்வர்” பட்டம் வழங்குதல்.
நாள் : 15-09-2019



பெறுநர்

திரு ____________

C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி

அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166